# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, மார்கழி 15 உ (30-12-73)ஞாயிறு ஜுல்கஃ: ஜுஹஜ்4-புத்தகம் 27 இதழ் 18


### எங்கும் பேரெழுச்சி! விழாக் கோலம்!

# தமிழாராய்ச்சி மாநாடு மூன்று நாட்களில் ஆரம்பம்!

## இறுதி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி!

### அரசியல் சாயம் பூசுவோருக்கு தனிநாயக அடிகளார் சாட்டை!

யாழ்ப்பாணத் திருநகரில் இன்னும் மூன்று நாட்களில் ஆரம்பமாகவிருக்கும் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டன. மாநாட்டு ஏற்பாடுகள் யாவற்றையும், அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் தந்தையும் தமிழ்ப்பேரறிஞருமான வண. பிதா. தனிநாயக அடிகளார் அவர்களே நாள்தோறும் காலை முதல் மாலை வரை முன்னின்று நேரடியாக கவனித்துவருகிறார்கள்.

மாநாட்டையொட்டி யாழ்ப்பாணத் திருநகரத்தின் வீதிகள், சந்திகள் அனைத்தும் எழில் குலுங்கும் சிகரங்களாலும், முத்துப் பந்தல்களாலும், அலங்கார வளைவுகளாலும் அழகு செய்யப்படுகின்றன.

தொடக்க விழா

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வரவிருக்கும் இந்தியத் தமிழ்நாட்டு அறிஞர்களுக்கும், மற்றும் வெளிநாட்டு அறிஞர்களுக்கும் விசா வழங்குவதில் இலங்கை அரசு கடைசி நேரத்திலாவது பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளப் போகிறதா அல்லது குறுகிய தமிழ் விரோத போக்கை கடைப்பிடிக்கப் போகிறதா என்ற கேள்வியே தமிழர்கள் மத்தியில் இப்போது எழுப்பப்படும் ஒரேயொரு கேள்வியாகும்.

சனவரி 3ம் திகதி ஆரம்பமாகும் மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சியான ஆராய்ச்சிக் கருத்தரங்கு யாழ் மத்திய கல்லூரிக்கு அண்மையிலுள்ள 'றிம்மர்' மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது!

பிரதான நிகழ்ச்சிகளில் இன்னோர் பகுதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

தமிழாராய்ச்சி மாநாட்டின் தொடக்கவிழா, சனவரி 3ம் திகதி, காலை 10 மணிக்கு றிம்மர் மண்டபத்திலே இடம்பெறவிருக்கிறது. அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவரான பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில், வண. தனிநாயக அடிகளார் மாநாட்டை தொடக்கிவைக்கவிருக்கிறார்.

அடிகளார் வேண்டுகோள்

மாநாடு நடைபெறும் 7 நாட்களிலும், நாள்தோறும் மாலையில், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் மற்றும் சில திற

(4-ம் பக்கம் பார்க்க)

### தோட்டத் தொழிலாளர்கள்

# வேலை நிறுத்த

# தொடர்கிறது!

அரசாங்கத்தின் உருட்டல் மிரட்டல்களையும், வானொலியிலும், பத்திரிகைகளிலும் அரசு நாள்தோறும் நடத்தும் பொய்ப்பிரச்சாரங்களையும் உதாசீனம் செய்து விட்டு, மாதச் சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் கழகம், ஆகியவையுட்பட பத்துக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களால் தொடங்கப்பட்ட இந்தவேலைநிறுத்தத்தில் அரசாங்க சார்பு கம்யூனிஸ்ட் தொழிற் சங்கமான ஐக்கிய தோட்டத்தொழிலாளர் சங்கமும் குதித்திருப்பது தெரிந்ததே.

தேசிய பேரவையில் இந்த வேலை நிறுத்தம் பற்றி உடுவில் பா. உ. கேட்ட கேள்விக்கு, தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் தரமுடியாது என்று நிதியமைச்சர் வெட்டொன்று துண்டு இரண்டாக பதிலளித்த பின்னர்,

(4-ம் பக்கம் பார்க்க)

### கடைசிச் செய்தி

தோட்டத்தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் 10வது நாளுடன் கைவிடப்பட்டுள்ளது.

### சுதந்திரன் விலை உயர்வு!

அடுத்த வாரம் 6-1-1974 முதல் சுதந்திரன் தனிப் பிரதியொன்றின் விலை 35 சதமாக அதிகரிக்கப்பட்டிருக்கின்ற தென்பதை சுதந்திரன் வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

— நிர்வாகி.

## 'ஈழத் தமிழர் உரிமை வாழ்வில் அக்கறை காட்டியவர் பெரியார்'

### மறைந்த தலைவருக்கு அமிர் அஞ்சலி!

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் மறைவு குறித்து தமிழரசுக்கட்சித் தலைவரும் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய நாவலர் அமிர்தலிங்கம் இரங்கற் செய்தியொன்றை விடுத்ததுடன், பெரியாரின் துணைவியார் மணியம்மையாருக்கு அனுதாபத் தந்தியொன்றையும் அனுப்பி வைத்தார்.

நாவலர் அமிர் விடுத்த இரங்கற் செய்தி வருமாறு:-

''நலிவுற்ற தமிழர்களின் நலிவினைப்போக்கி, சாதியத்தையும் மூடத்தனங்களையும் தகர்த்தெறிந்திடப் போராடிவந்த பகுத்தறிவுச் சிங்கம் பெரியாரின் மறைவு இந்திய நாட்டுக்கு மட்டுமன்றி—உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவருக்குமே ஒரு பேரிழப்பாகும்.

''அரை நூற்றாண்டு காலமாக ஓய்வு ஒழிச்சலின்றி தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்து வந்த பெரியாரின் பெருந்தொண்டினால் தான், தமிழ் சமூகம் தலை நிமிர்ந்து தன்மானம் பெற்றது, இன்று தன்னையுணர்ந்து சுயமரியாதையின் அடிப்படையில் விடுதலை வேண்டிப்போராடி வருகின்றது.

''இந்தி மொழியை எதிர்த்து, தமிழ் மொழியை வாழவைத்திட — பலமுறை சிறை சென்ற பெரியாரின் வரலாறு—தமிழர் வரலாற்றின் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும்;

''ஈழத்தமிழர்களின் மீது பற்றும் பாசமும் கொண்ட பெரியார் அவர்கள், இலங்கையில் தமிழர் உரிமை நசுக்கப்படும் போதெல்லாம், அதை எதிர்த்து அக்கரையிலிருந்து குரல் கொடுத்தவர்;

''சென்ற ஆண்டு துவக்கத்தில் தந்தை செல்வா அவர்களுடன் நாம் தமிழகம் சென்றிருந்தபோது பெரியாரைச்சந்தித்தோம்; சுகவீனமுற்றிருந்த நிலையிலும் ஈழத்தமிழர்களின் நிலைமை பற்றி அவர் ஆர்[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## உடுவில் பா.உ.வுக்கு கருணாநிதி நெடுஞ்செழியன் ம. பொ. சி. தொண்டமான் வாழ்த்துரைகள்!

உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்களின் 25 ஆண்டு கால பொதுத் தொண்டுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள வெள்ளிவிழா மலருக்கு தமிழக முதல்வர் கலைஞர், டாக்டர் கருணாநிதி, டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., தொண்டமான் ஆகியோர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்திகள் வருமாறு:-

கருணாநிதி வாழ்த்து

''இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமையும் நல்வாழ்வும் கருதிப்பணிபுரியும் இலங்கைத் தமிழரசு கட்சியின் முன்னணித் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவரான திரு. வி. தர்மலிங்கம் எம். பி அவர்களின் சிறப்பான பொதுப்பணிக்கு வெள்ளிவிழா நடைபெற இருப்பதறிந்துமிக்கமகிழ்ச்சியடைகிறேன்.

''விழாவையொட்டி வெளியிடப்பெற இருக்கும் பாராட்டுமலர், வெளவிழாக்கொள்ளும் அன்பருக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டத்தக்கவகையில் சிறப்பாக அமையவும், மேலும பலரைப் பொதுப்பணியில் ஈடுபடுத்தத்தக்க வகையில் அமையவும் விரும்பி, மனமார வாழ்த்துகிறேன்.''

நெடுஞ்செழியன் வாழ்த்து

''இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. வி. தர்மலிங்கம் அவர்களது இருபத்தைந்து வருட சமூக. அரசியல் சேவையைப் பாராட்டி வெள்ளி விழா நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அன்னாரின் சமூகத் தொண்டு தொடர்ந்து நாட்டுக்கு நல்லமுறையில்கிடைத்திடவேண்டுமென்று வாழ்த்துவதோடு, விழாவும் அதனையொட்டி வெளியிடப்படவிருக்கிற மலரும் சிறக்க எனது இதய நல்வாழ்த்துக்களை வழங்குகிறேன்.''

ம. பொ. சி.

''அன்பர் தர்மலிங்கம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு, இலங்கை தமிழினத்தின் வாழ்வுக்கு ஆற்றி வந்துள்ள அரும் பணிகளுக்காக அவருக்குச் சிறப்புச் செய்ய முயலும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

''இலங்கைத் தமிழ் மக்கள் இன்னமும் பல கடுமையான சோதனைகளைச் சந்திக்கவேண்டிய சூழ் நிலையில் வாழ்கின்றனர். திரு. வி. தர்மலிங்கம் போன்ற அன்பர்களின் பணி அவர்களுக்குத் தேவைபடுகிறது. இலங்கைத் தமிழினமும்: தமிழரும் உரிமை வாழ்வு நடத்தும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதில் பங்கு கொண்டு வெற்றி காண திரு. வி. தர்மலிங்கம் எம். பி. அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றேன்.''

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சிந்தனைகள்

[illegible] ஆண்டில் உள் [illegible]றைவரித் திணைக் [illegible]ழ் இலக்கிய மன் [illegible] நடாத்தப்பட்ட [illegible]ரைப்போட்டியில் ''ஈழ இலக்கிய வளர்ச்சி'' [illegible]ற தன் கட்டுரைக்கு [illegible]தற் பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றார் பண்டிதர் க. வீரகத்தி. அதே ஆண்டு கார்த்திகை — மார்கழியில் வெளியான ''கற்பகம்'' இதழிற் கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. சிறுகதை, நாவல் நாடகம், கட்டுரை, விமர்சனம், கவிதை என்ற துறைகளில் ஈழநாட்டாரின் முயற்சிகளைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்கின்றது' அக்கட்டுரை.

சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரை 'மின்னலோட்டம்' ஓடியிருக்கிறார் பண்டிதர் (பண்டிதர் என்று அவருடைய கல்வித்தகைமையைத்தான் குறிப்பிடுகின்றேன். 'பண்டித மனப்பான்மை' என்ற பிற்போக்குத் தொனியை இங்கே வலிந்து ஏற்றி, யாரும் சங்கடப்பட வேண்டாம்) கடுகு சிறிதெனினும் காரம் பெரிது என்பதைப் போல, அந்தச் சிறிய கட்டுரையிலே காரமான சில கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார் பண்டிதர்:

தமிழகத்திலும் இலக்கியம் ஆக்கப்படுகின்றது; ஈழத்திலும் இலக்கியம் ஆக்கப்படுகின்றது. இரு நில மக்களும் தம் படைப்புடன் மற்றவர் படைப்புக்களையும் பரஸ்பரம் சுவைக்கின்றனர்; உள் நிறைவு எய்திடுகின்றனர் என மிக நிதானமாக ஆரம்பித்து, சில கால கட்டங்களில் ஈழத்து இலக்கியம் தமிழக இலக்கியத்தைவிடச் சுவையிற் கூடியிருந்த தென்றும், சில துறைகளில் ஈழம், தமிழகத்தை வழி நடத்தி வந்துள்ளது என்றும் குறிப்பிடுகின்றார் பண்டிதர்.

இலக்கிய வரலாற்றில் பொதுமக்கள் இலக்கியம் என ஒன்று முதன் முதலிற் றோன்றிற்றென்றால், அது கதிரைமலைப் பள்ளேயாகும்; கதிரைமலைப் பள்ளின்நாதம் தமிழகத்தை எட்டிய பிற்பாடே அங்கு முக்கூடற் பள்ளு எழுந்தது —

சிலப்பதிகாரத்திற்குப் பின்பு, சாதாரண பொதுமக்களில் ஒருவரைத் தலைவராகக் கொண்டு எழுந்த சிறுகாவியம் கனகி புராணமே; இதை எழுதியவர் நட்டுவச் சுப்பையனார் என்ற யாழ்ப்பாணத்துப் புலவர்; இதற்குப் பிறகுதான், பாரதியின் பாஞ்சாலி சபதம் பிறந்தது; வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா எழுந்தது; பாரதிதாசனாரின் பல சிறு காவியங்கள் எழுந்தன —

பாரதிதான், முதன் முதலிற் சின்னக் கவிதைகளைப் பாடினான். கவிதை, வடிவத்தாற் கொஞ்சு தமிழாயினும் உள்ளடக்கத்தாற் கடுமையாயிருந்தது. நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையுமே உண்மையான குழந்தைக் கவிஞர்கள். இந்த இருவர்களிலும் குழந்தையின் அனுபவத்தையொட்டிக் கவிதை தந்தவர் தங்கத் தாத்தாவே ஆவர் —

என்றெல்லாம் விரித்து விளக்குகின்றார் பண்டிதர். ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அக்கறையுடையவர்கள் நிச்சயம் வாசிக்கவேண்டிய கட்டுரை இது.

## இலக்கியச் சித்தன்

ஒன்று சொல்ல வேண்டும். கட்டுரையிற்பண்டிதர்கூறும் கருத்துக்கள் அத்தனையையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என நான் கூறவில்லை. நாவல், சிறுகதை பற்றிப் பண்டிதர் கொண்டுள்ளமுடிவை நானே ஏற்றுக்கொள்ளவில்லை. பண்டிதரின் இலக்கிய நேர்மையையும் அபிப்பிராய சுதந்திரத்தையும் நான் மதிக்கிறேன். அதனுற்றான், அக் கட்டுரையை வாசித்துப் பார்க்கும்படி இலக்கியப் பிரியர்களுக்குச் சிபார்சு செய்கிறேன்.

இனி, இக்காலத்துத் தமிழ்க் கவிதை பற்றிப் பண்டிதர் கூறிய கருத்தையும், அதைக்கண்டு வெகுண்டெழுந்த ''முருகையன்'' கூறியவற்றையும் பற்றிச் சற்றே சிந்திப்போம்.

''இலங்கை சுதந்திரமடைந்த பிற்பாடு கவிதைத் தொழிலிற் பலர் இறங்கியுள்ளனர். தமிழகத்திலும் பார்க்க, ஈழத்திலேதான் கவிதை ஆக்கம் எண்ணிக்கையிற் கூடியுள்ளது. தரத்தைப் பற்றிக் குறிப்பிட்டால் அது கவலைக்கிடமானதாக முடியும். விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே தரமான கவிதைகள் தருகிறார்கள்-பரவலாகப் பார்க்கும்போது, தமிழகக் கவிதைகள்—விரும்பினாலுஞ் சரி, விரும்பாவிட்டாலுஞ் சரி — ஈழக் கவிதைகளிலும் பார்க்கத் தரத்திற் கூடியனவே. கவிதையைப் பொறுத்த வரையில், சூடு சுவையற்ற—நளினமும் நயமுமற்ற—கற்பனையும்கருத்துமற்ற — சிந்தனையும் சீருமற்ற — உருவ உள்ளடக்க உத்திநிலைதான் தெரிகின்றது. என்றாலும் எதிர்காலம் இழுமென்னோசையுள்ள விழுமிய கவிதைகளை ஈழத்திற்குத் தருமென்ற நம்பிக்கையே உண்டு''!

இவைதான் பண்டிதரின் கருத்துக்கள். இதற்குமேல் இக்காலக்கவிதைகள்பற்றிப் பண்டிதர் ஒன்றும் கூறவில்லை. தன் கூற்றுக்கு மேற்கோளாக எந்த ஒரு கவிதையையுமே காட்டவில்லை. பாரபட்சமற்ற முறையில் — அவசரப்பட்டு ஆத்திரப்படாது இந்தப் பந்தியை வாசிக்கும் எவரும், பண்டிதர் ஈழத்துக் கவிஞர்களை ஒரேயடியாக 'இறக்கி' விட்டார் எனக்குற்றம் சுமத்தார். விரல் விட்டு எண்ணக்கூடிய தரமான கவிஞர்கள் இங்கே இருக்கின்றனர் என்பதை அவர் ஒப்புக்கொள்ளுகின்றார் எதிர்காலத்தில் இன்னும் விழுமிய கவிதைகள் இங்கே தோன்றும் என்ற நம்பிக்கை இருக்கின்றதென்றால், அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே காணப்படுகின்றன என்றும், ''உயர்தர''த்தை நோக்கி இந்நாட்டுக் கவிதைகள் துரித நடை போடுகின்றன என்றுந்தான் அர்த்தம்.

பண்டிதரே ஒரு கவிஞர்; தன் கவிதைக்காகச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற கவிஞர். அவருக்குக் கவிதை உள்ளம் இருக்கிறது. கவிதையை ''நாடி'' பிடித்துப் பார்க்கும் தகுதி இருக்கிறது மேற்கோளாக எந்தக் கவிதையையும் அவர் காட்டா விட்டாலும், கட்டுரையின் (சிறுகதை-நாவல் தவிர்ந்த) ஏனைய பகுதிகளிற் காணப்படுகின்ற காத்திரமான, ஆழமான கருத்துக்களைப் பார்க்கும்போது, தமிழகத்திலும் ஈழத்திலும் வெளியான பல கவிதைகளை வாசித்து மனங்கொண்ட பின்னர்தான் தன் அபிப்பிராயத்தை அவர் வெளியிட்டிருக்கிறார் என உறுதியாகச் சொல்வேன்.

எந்த அரசியற் கட்சிக்கோ அல்லது இயக்கத்துக்கோ பயந்து தன் இலக்கியக் கொள்கையை அடகு வைக்காத, ஒருவர் பண்டிதர். பத்திரிகை ஆசிரியர்களையும், ஏதோ வழியிற் பிரபலமடைந்து விட்டவர்களையும் 'வால் பிடிக்கத்' தெரியாதவர். அவரிடம் 'வித்துவத் காய்ச்சல்'' இருந்திருந்தால் இப்போதைய கவிஞர்கள் சிலரின் பெயரைக் குறிப்பிட்டுப் பகிரங்கமாகவே அவர் 'கழட்டி' யிருப்பார்!

இப்படி அவர் செய்யாததிலிருந்து, தான் நம்புவற்றை இலக்கிய நேர்மையுடன்—இதய சுத்தத்துடன் சொல்லியிருக்கிறார் என்றுதான் கொள்ளவேண்டும்.

இந்த விஷயங்களை ஆறுதலாகச் சிந்தித்துப் பார்க்காமல், அல்லது திடீரென்று வெடித்துக் கிளம்பிய ஆவேசம் காரணமாகப் பண்டிதர் மீது பாய்ந்திருக்கிறார் முருகையன். ''கழுவாய் தேடுங்கள்'' என்ற தன் கட்டுரையில் (கற்பகம் — தை: மாசி 1971) தன் ஆத்திரம் முழுவதையும் கொட்டித் தீர்த்திருக்கிறார் முருகையன்.

பண்டிதருக்குத் தன் அபிப்பிராயத்தை வெளியிடச் சுதந்திரமிருப்பதைப் போல் அதை மறுப்பதற்கு முருகையனுக்குஞ் சுதந்திரமிருக்கிறது. ஆனல், மறுப்பு நாகரிகமான முறையில் அமையவேண்டும். எதிராளியால் மறுத்துரைக்க முடியாத உண்மைகளையும் வாதங்களையும் முன் வைக்க வேண்டும்.

கவிதை பற்றிப் பண்டிதர் சொன்னவற்றைத்தான் முருகையனால் ஏற்க முடியவில்லை. அதனலெழுந்த ஆத்திரத்தினால், பண்டிதரின் கட்டுரை முழுவதையுமே ஒதுக்க நினைக்கிறார் முருகையன்.

'கழுவாய் தேடுங்கள்' என்ற ஆலோசனையே அதிகப் பிரசங்கத்தனமானது. 'அடிக்குறிப்புக்களும் உசாத்துணைகளும் சான்றுதாரங்களும் கொண்டு திகழ்கின்றது. அதனல், ஆராய்ச்சிக் கட்டுரை போலவும்தோற்று

(7-ம் பக்கம் பார்க்க)

# எழுத்தாளர் பேரவையின் ஏழு தீர்மானங்கள்!

ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையின் செயற்குழுக் கூட்டம் 16. 12. 73ல் காலி வீதி பம்பலப்பிட்டியிலுள்ள 676ம் இலக்கத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திரு. ஈழவேந்தன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பேரவையின் அமைப்பு விதிகள் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு வேண்டிய திருத்தங்களுடன் ஏகமனதாக ஏற்கப்பட்டன.

செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தமிழ் மாநாட்டுக்கு ஆதரவு

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யவும் — திறமையான புலமைதனை வெளிநாட்டார் அறிந்திடச் செய்யவும்—பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழில் பெயர்த்திடவும் — இறவாத புகழுடைய புதுநூல்களை தமிழில் யாத்திடவும்—விரும்பியபாவலன் பாரதியின் கருத்துக்களுக்கு வடிவம் கொடுக்கின்றமுறையில் ஈழத்தமிழன் தன்னை உணரவும், தன் வரலாற்றை அறியவும், இம் மண்ணுக்கும் தனக்கு முள்ள உரிமையை வெறும் உணர்ச்சி நிலையில் அன்றி அறிவு நிலையில் ஆய்வு நிலையில் வரலாற்றுச் சான்று கொண்டு ஆராய்வதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய அளவில், எதிர்வரும் சனவரி 3-ம் நாளிலிருந்து 9-ம் நாள் வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 4-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை தன்னுடைய முழு ஆதரவை வாரி வழங்குவதோடு சகல தமிழ் எழுத்தாளர்களையும் இலக்கிய வாதிகளையும், கலைஞர்களையும், பொது மக்களையும் இம் மாநாடு வெற்றி பெற ஒத்துழைப்பு நல்கும்படி கோரும் அதே நேரத்தில் — அரசியல் சார்பற்ற இந்த மாநாட்டுக்கு, தனது பூரண உதவியையும் ஒத்துழைப்பையும் அரசு நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறது.

## காசி ஆனந்தனை விடுதலை செய்க

(2) தமிழ் கூறும் நல்லுலகு அனைத்திலும் பாராட்டப்பெற்றவரும் ஈழத்தின் அதி சிறந்த கவிஞரும், எழுத்தாளருமான திரு. காசி ஆனந்தன் அவர்களை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எதுவித நீதி விசாரணையுமின்றி தடுப்புக்காவல் சிறையில் அடைத்து வைத்திருக்கும் அரசின் சனநாயக விரோதச் செயலை எமது பேரவை மிகவும் வன்மையாககண்டிப்பதுடன்—திரு. காசி ஆனந்தன் மீது உடனடியாக நீதி விசாரணை நடத்தப்படவேண்டும் அல்லது அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் பிரதமரிடம் கோருகிறது.

## இறக்குமதி தடைக்கு எதிர்ப்பு

(3) பாலுணர்வைத் தூண்டிவிட்டு இந்நாட்டு இளம் சந்ததியினரின் உள்ளங்களை கெடுத்து, நமது பண்பாட்டை நாசப்படுத்தும் நச்சு இலக்கியங்கள் எந்த நாட்டிலிருந்து வந்தாலும் — எம்மொழியில் வந்தாலும்— அவற்றை தடைசெய்யும்படி கோரும் அதே நேரத்தில் — ஈழத்தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்குமிடையே கலாசார இலக்கிய பாலமாக விளங்கும் இந்திய தமிழ் பத்திரிகைகளினதும் சஞ்சிகைகளினதும் இறக்குமதியை தடைசெய்வதையோ அல்லது கட்டுப்படுத்துவதையோ ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை கடுமையாக எதிர்ப்பதுடன், இத்தகைய முயற்சி எதுவும் ஈழத்தமிழர்களை தனிமைப்படுத்தி அழிக்கும் ஒரு சூழ்ச்சியாகவே கருதப்படும் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

## உள்ளூர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுக

(4) உள்ளூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிடத் தயாராக இருப்பதாக அரசு தரப்பில் அடிக்கடி உறுதிமொழிகள் அளிக்கப்படுகின்றனவே தவிர அவை செயற்படுத்தப்படுவதில்லை யென்பதை ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை விசனத்துடன் கவனிக்கும் அதேவேளையில், அரசு தனது சொல்லை செயலாக்கி, இலக்கிய ஆர்வமுடன் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட முன்வரும் எழுத்தாளர்களுக்கு, அரசியல் கட்சி பேதமின்றி மலிவு விலையில் கஷ்டமின்றி தாள் கிடைக்கவும், அரசாங்க, கூட்டுத்தாபன விளம்பரங்கள் கிடைக்கவும்வசதியேற்படுத்தித்தர வேண்டுமென்றும் வற்புறுத்துகிறது.

## குழு ஆதிக்கத்துக்கு கண்டனம்!

(5) ஈழத்தில் [illegible] கடுமையான பஞ்சம் ஏற்பட்டு விட்டதோ என்று வெளிநாட்டார் எண்ணும் வண்ணம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையை ஒரு குறிப்பிட்ட குழுவினரே ஏகபோகமாக ஆக்கிரமித்துக் கொண்டு, இந்நாட்டில் வாழும் பல்வேறு துறைகளையும் சார்ந்த உண்மையான தமிழ் கலைஞர்களையும் இலக்கியவாதிகளையும் அரசியல் கண்ணோட்டத்துடன் புறக்கணித்து ஒதுக்கி வருவதை நமது பேரவைமாண்புமிகு தகவல் ஒலிபரப்பு அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரும் அதே வேளையில் இத்தகைய பாரபட்சங்களையும் குழு ஆதிக்கத்தையும் நீக்கி தமிழ் கலைஞர்கள் யாவரும் அரசியல் பாரபட்சமின்றி ஒலிபரப்பு தமிழ்ச்சேவையில் பங்கு பற்ற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் தகுந்த நடவடிக்கை யெடுக்கவேண்டும் என்றும் கோருகிறது.

## ரஷியநாட்டு தமிழறிஞர் மறைவுக்கு அனுதாபம்

(6) பிறப்பினல் ரஷியராகப்பிறந்தும், உணர்வினல் தமிழராகமாறி — தன்னுடைய பெயரையே தூய தமிழில் 'செம்பியன்' என மாற்றியமைத்து — வீரமா முனிவர், சீகன்பேக், போப்ஐயர் கால்டுவெல் ஆகியோர் வழியில் வாழ் நாள் முழுவதும் தமிழுக்கு தொண்டாற்றி வந்த ரஷிய நாட்டு தமிழறிஞர் செமியோன் ருதின் அவர்களின் மறைவுக்கு, ஈழத் தமிழர்களினதும், எழுத்தாளர்களினதும் சார்பில், ஈழத் தமிழ் இளைஞர்பேரவை தன்னுடைய அஞ்சலியை தெரிவித்துக்கொள்ளுகிறது.

## வேல் ஆனந்தனுக்கு பாராட்டு

(7) அண்மையில் ''அனைத்துலக நாட்டியக்கலைஞர்'' என்ற சிறப்பு விருதைப் பெற்று, ஈழத்தமிழகத்துக்கு தனிப்பெருமை சேர்ந்த கலைஞர் வேல் ஆனந்தனுக்கு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை தன்னுடையவாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெரியார்' எனும் ஒரு பெரும் தத்துவம்!

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நிழலாக நின்று பயன் தந்து வந்த அந்த மாபெரும் ஆலமரம் வேரோடு சாய்ந்துவிட்டது!

அந்த ஆலமரம் தந்த விழுதுகள் இன்று ஆற்ருது அழுதுபுலம்பி தவிக்கின்றன!

மூட நம்பிக்கைகளால் மூடப்பட்டு—சாதி மதச் சகதிகளில் சிக்கித் தவித்துக் கிடந்த தமிழர் சமுதாயத்தை கைதூக்கி விடவந்த அந்த பகுத்தறிவுச் சிங்கம் திரும்பி வராத பயணத்தை மேற்கொண்டு விட்டது!

ஆம், வெண்தாடி வேந்தர் — திராவிட இயக்கத்தின் தந்தை — தனிப்பெரும் சீர்திருத்தச் செம்மல் — அந்நிய மொழி ஆதிக்கத்தின் எதிரி மூட நம்பிக்கைகளின் வைரி பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்கள்!

தன்னுடைய சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை — திராவிட சமுதாயத் கொள்கையை—நாடெலாம் பரப்பி தமிழர் ஆட்சியை மீண்டும் தமிழ் நாட்டில் ஏற்படுத்தி வைத்ததமது முதல் சீடனை பேரறிஞர் அண்ணு அவர்கள் இருக்குமிடம் தேடி பெரியார் அவர்கள் சென்று விட்டார்கள்!

தன்னுடைய கருத்துக்களை —தத்துவங்களை பாதுகாத்து வளர்த்துவர — தன்னல் வளர்க்கப்பட்ட பிள்ளைகளின் ஆட்சி இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் பெரியார் அவர்கள் துயில்கொள்ளச் சென்றுவிட்டார்கள்!

சென்ற ஆண்டு, கிறிஸ்துமஸ் தினத்தில், மூதறிஞர் ராஜாஜியை பறிகொடுத்துப் பரிதவித்தோம்!

இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தில், திராவிட இயக்கத்தின் தந்தையாம் 'ஐயா' அவர்களை இழந்து தவிக்கிறேம்—

அறியாமையில் மூழ்கி—அடிமைத் தளையில் சிக்கி—தமது வரலாற்றையே மறந்து — மூட நம்பிக்கைகளில் அகப்பட்டு, தவித்து நின்ற தமிழர் சமுதாயத்தை —திராவிட சமுதாயத்தை— அவற்றிலிருந்து விடுவித்து சுயமரியாதையும் சுதந்திர உணர்வும் உள்ள ஒரு இனமாக உருவாக்குவதற்கு திராவிட இயக்கம் உழைத்த தென்ருல்—அதன் மூலகர்த்தாவாக திகழ்ந்தவர் பெரியார் அவர்கள்!

பேரறிஞர் அண்ணு, கலைஞர் கருணுநிதி, நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன், போன்ற திராவிட இயக்கத் தலைவர்கள் அனைவரும் பெரியார் என்ற வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளே!

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மக்களின் உயர்வுக்காக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்துவந்தவர் பெரியார்!

பெரியாரின் பொது வாழ்வுக் காலம் இரண்டுவகையாகப் பிரிக்கக் கூடியது. ஒன்று, இந்திய தேசிய காங்கிரசில் அவர் இருந்த காலம்; மற்றது காங்கிரசிலிருந்து வெளியேறி, சுயமரியாதைப் பிரச்சாரத்திலீடுபடத் தொடங்கிய காலம்!

## கோவை மகேசன்

1920ம் ஆண்டு மகாத்மா காந்தி தலைமையில் இயங்கி வந்த இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியார் கதர் துணியை முதுகில் சுமந்து விற்ருர். கள்ளுக் கடை மறியலில் கலந்துகொண்டு குடும்பத்துடனே சிறை சென்ருர். கேரளத்தில் உள்ள வைக்கம் என்ற இடத்தில் தீண்டாமையொழிப்பு போராட்டம் நடத்தி வெற்றி பெற்று 'வைக்கம் வீரர்' என்ற சிறப்பு பட்டத்தை பெற்ருர். 1924ம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஆனல், தேசிய விடுதலைக்காக போராடிய காங்கிரஸ் கட்சியிலும், பலர் சாதி வேறுபாட்டை கவனிப்பதை கண்ட பெரியார் மனம் வருந்தி அடுத்த ஆண்டே, அக்கட்சியிலிருந்து வெளியேறி' சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கினர்!

அன்றிலிருந்து — சூருவளியாக சுற்றிச் சுழன்று ஜாதி மதங்களையும், மூடக்கொள்கைகளையும் தாக்கு தாக்கென்று தாக்கி, மக்களின் அறிவுக் கண்களை திறந்து வைப்பதில் தம்முடைய இறுதி மூச்சுவரை ஈடுபட்ட பெரியார் அவர்கள் — தம்முடைய பணியில் சந்திக்க நேர்ந்த எதிர்ப்புக்கள், இழிமொழிகள் ஏராளம் ஏராளம்!

சாதி மத சனதனக்கொள்கைகளில்—பல்லாயிர ஆண்டுகளாக ஊறித்திளைத்த மக்களிடம் சீர் திருத்தக்கருத்துக்களைப் புகுத்துவது எவ்வளவு கஷ்டமான பணி என்பதை பெரியார் அவர்கள் தம்முடைய வாழ் நாளில் சந்தித்த எதிர்ப்புக்கள் புலப்படுத்துகின்றன.

ஆனல், எதிர்ப்புக்கள் எவ்வளவு கடினமானதாகஇருந்தாலும் பெரியார் அவர்கள் பின்னின்றதில்லை; அஞ்சி நின்றதில்லை!

எதிர்ப்புக்களே அவரது இலட்சிய ஆவேசத்தை அதிகரிக்கச் செய்திருக்கின்றன.

திராவிட இயக்க மாநாட்டுப் பந்தல்கள் எத்தனையோ கொளுத்தப்பட்டிருக்கின்றன; மாநாடு நடைபெறும் போது அரிவாள், கத்திகளோடு மாற்ருர் புகுந்து கலாட்டா செய்திருக்கிருர்கள் பல தடவைகளில்! பெரியாரைக் கொலை செய்வதற்கே பலர் குறிவைத்திருக்கிருர்கள். ஆனல், அஞ்சவில்லை பெரியார்!

அஞ்சாமை, துணிவுடைமை, ஏற்றுக்கொண்ட இலட்சியத்தில் ஆழமான பற்று— உள்ளத்தில்படுவதைவெளிப்படையாக கூறும் ஆண்மை- பதவி ஆசையின்மை - இவை பெரியாரின் பொது வாழ்விலிருந்து நாம் படித்துக் கொள்ளவேண்டிய பண்புகளாகும்.

தமது 60 ஆண்டுப் பொது வாழ்வில், தேர்தலில் போட்டியிட்டு பதவி பெறுவதை பெரியார் அவர்கள் தமது இலட்சியமாக ஒருபோதுமே கொண்டிருந்ததில்லை!

சாதி மத மூடக்கொள்கைகளை தகர்த்தெறிந்து, சமதர்ம சமுதாயத்தை கட்டியெழுப்ப ஓயாதுழைத்த பெரியார் — தமிழ் நாட்டில் வேற்றுமொழி ஆதிக்கம் நுழைவதை எதிர்த்தும் போராடப் பின்னின்றதில்லை!

1938ம் ஆண்டு முதன் முதலாக இந்தி திணிக்கப்பட்ட நேரத்தில் அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி சிறைசென்ற பெருமை பெரியாருடையதே. தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புணர்ச்சியை உருவாக்கி, தமிழுக்கு பாதுகாப்பு தேடித்தந்தவர் பெரியார்.

வட இந்திய ஆதிக்கத்திலிருந்து தமிழ் நாடு விடுதலை பெற்று — ஒரு பூரண சுதந்திரமுள்ள தனிநாடாக தமிழ் நாடு உருவாகவேண்டும் என்பதே பெரியாரின் இறுதிக்கால ஆசையாக இருந்தது.

இந்த இலட்சியத்துக்காக, சிறை செல்லவும் தாம் தயாராக இருப்பதாக பெரியார் அவர்கள தம்முடைய இறுதிக் காலங்களில் முழங்கி வந்தார். தம்முடைய பொது வாழ்வில் 19 தடவைகள் சிறை சென்று சிறைச்சாலையை புனித பூமியாக்கியவர் பெரியார்!

ஈழத்தமிழர்கள் மீது பற்றும் பாசமும் கொண்ட பெரியார், ஈழத் தமிழர்களின் உரிமை மறுக்கப்படுவதையும், தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுவதையும் கேட்கும்போதெல்லாம் தம் உணர்ச்சிகளைக் கொட்டி 'விடுதலை'யில் காரசாரமாக கண்டனக்குரல் எழுப்பத் தயங்கியதில்லை.

1972ம் ஆண்டு, தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோருடன் தமிழ் நாட்டுக்கு சென்றிருந்த போது — பெரியார் அவர்களைச் சந்தித்துப் பேசிய காட்சி என்றும் என் நினைவை விட்டு அகல முடியாத காட்சியாகும்.

கட்டிலில் படுத்திருந்த அவர் அதிலிருந்து எழுந்திருந்து மெத்த ஆர்வமுடன் அன்புடன் — தந்தை செல்வாவையும் எம்மையும் வரவேற்று வாத்சல்யத்துடன் அளவளாவி மகிழ்ந்தார். இலங்கைத்தமிழர் படுகின்ற இன்னல்களை அறிந்து வேதனைப் பட்டார்.

ஈழத்தமிழர்களுக்கு உரிமை பெற்றுத்தர 'தமிழ் நாட்டுக்கு அதிகாரம இல்லையே; டெல்லிக்காரனிடமல்லவா அதிகாரம் இருக்கிறது?' என்று கூறி சலிப்படைந்தார். ஈழத் தமிழர் போராட்டத்துக்கு தம் ஆசியை வாரி வழங்கினர்.

அத்தகைய பெரியார் இன்று நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாரா?

நான் நம்பவில்லை! [partly obscured by ink stain]

பெரியார் ஒரு தனிமனிதரல்ல—அவர் ஒரு சகாப்தம் அவரே ஒரு தத்துவம்!

தத்துவங்கள் ஒருபோதும் மறைவதில்லை!

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு—

எனும் வள்ளுவனின் தத்துவத்துக்கு இலக்கணம் வகுதத செந்தமிழர் மேதை பெரியார்!

'ஆண்மைத் தமிழரின் தந்தை
அறிவு குவிந்து விலைப்படு சந்தை!
வீணர்களுக்கெலாம் நஞ்சன்!
வீரம் திரண்டு விளங்கிடு நெஞ்சன்,
மாண்பு மிகுந்ததோர் தங்கம்—
மானம் விளையும் தமிழர் சுரங்கம்,
ஈனப்புராணிகர் பாதை
இடியப் புதுவழி காட்டிய மேதை!

தங்கத் தமிழ் மணி உள்ளம்!
தந்தை பெரியார் தமிழ்ப்பொன்னி வெள்ளம்
செங்கண் இரண்டுமே போதும்!
சிதறி நொறுங்கும் சிறியோர் உடலம்!
கங்குல் விலககுதல் செய்யும்
கதிரோன் இயக்கம் பெரியார் இயக்கம்!
பொங்கு தமிழகம் ஒன்று
பூக்கப் பிறந்த புறத்தமிழேறு!!

(5-ம் பக்கம் பார்க்க)

## —செய்திச் சுருள்—

○ காமாலைக் கண்ணர்களுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியுமாம்.

○ யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு பற்றி எவ்வளவுதான் எடுத்துக்கூறினுலும் — இப்படிப்பட்ட காமாலைக் கண்ணர்களுக்கு அது 'அரசியல்' ஆகத் தெரிவதில் வியப்பொன்றுமில்லையாம்.

○ அமைச்சர் ஒருவர் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வரமுடியாது என்று அழைப்பை நிராகரித்ததற்கு அந்தரங்கமாக வேறு காரணங்கள் உண்டாம்.

○ தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு செல்லும் இடத்தில் வெளிநாட்டு அறிஞர்களுக்குமுன்னல் உணர்ச்சிமிக்க தமிழ் இளைஞர்கள் தமக்கு கறுப்புக்கொடி காட்டிவிட்டால் என்னுவது என்ற இவருக்கு உள்ளூர அச்சமாம்!

● தமிழர்களே தமக்குக் கறுப்புக்கொடி காட்டுவதை வெளிநாட்டார் கண்டுவிட்டால், தமது மானம் கப்பலேறிவிடுமே என்பதே இவருக்குள்ள பயமாம்.

○ அதனல்தான் ஏதோ 'விழல்' காரணங்கள் காட்டிமாநாட்டுக்கு செல்லாமல் தட்டிக் கழித்துள்ளாராம்!

○ யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கு கொள்ளக்கூடாது—என்று கொழும்பில் சீவிப்பவர்கள் வேண்டுமானல் கூறிக்கொண்டிருக்கலாம்; ஆனல் யாழ்ப்பாணத்தின் முதல் மனிதனை நான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டுஎப்படி அதில் பங்குபற்ருமல் இருக்கமுடியும் என்று தமது நண்பர் ஒருவரிடம் கூடி 'தாரைப் பிப்பா' அழுது வடிந்ததாம்!

○ கொழும்பில்தான் மாநாடு நடைபெறவேண்டும் எனபதை வலியுறுத்தி விழல் கட்டுரையொன்றை 'நொண்டி'க் காரணங்களுடன் ஏரிக்கரைப் பத்திரிகையில் ஒரு 'சனியன்' எழுதியிருக்கிறதாம்.

○ இந்தச் சனியன், தமிழக வரலாறே கண்டிராத 2வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும், அதை நடத்திய தி. மு. கழக ஆட்சிக்கும் அவப்பெயர் சூட்டியிருக்கிறதாம்!

○ வாக்குச்சீட்டு தேடுவதற்காகவே இந்த மாநாட்டை தி.மு.க பயன்படுத்தியதாக இது சின்னத்தனமாக எழுதியிருக்கிறதாம்!

○ 1967ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெருவெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்த தி. மு. க வுக்கு 1968ம் ஆண்டு வாக்குச் சீட்டுப்பிடிக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்பதை இந்த சனியன் அறியாமற்போனது வியப்புக்குரியதுதானும்.

○ தமிழுணர்ச்சிக்கு எதிராக பகை கக்குவதே இதன் துரோக வேலையாம்!

○ தமிழாராய்ச்சி மாநாட்டை எதிர்த்துவந்த 'சுதந்திரன்', இப்போது அதை ஆதரிப்பதால், மாநாடு அரசியல் கலப்புடையது என்று இது விழல் வாதம் புரிந்திருக்கிறதாம்!

○ 'சுதந்திரன்' தமிழாராய்ச்சி மாநாட்டை ஒருபோதுமே எதிர்க்கவில்லையென்பதையும், மாநாட்டினை அரசாங்க பிரசார மாநாடாக நடத்துவதையே எதிர்த்ததென்பதையும் ''மிரண்டு'' போய்ப் பிதற்றும் இந்தச்சனியன் உணரவில்லையாம்!

○ தமிழ் சமுதாயத்தில் இத்தகைய 'புற்றுநோய்கள்' இருப்பது தமிழினம் செய்த பாவமாம்!

○ புற்று நோயைவிட ஒரு சமுதாயத்தை கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது இலஞ்ச ஊழல்தானும்.

○ இந்த இலஞ்ச ஊழல் வடக்கில் அதிகமாகஇடம் பெறுவதில்லையென்று பீலிக்ஸ் டயஸ் பகிரங்கமாகவே கூறியிருப்பதுதமிழனுக்கு பெருமை தருவதுதானும்!

○ இலஞ்சக் குற்றச்சாட்டு வராவிட்டால் மட்டும், இலஞ்சம் ஊழல் இல்லையென்று அர்த்தமல்லவாம்!

○ செலவுக்கு காக சேட்கிறதும், நன்கொடை கேட்பதும்கூட ஒருவகை இலஞ்சம்தானும!

○ இலஞ்ச ஊழல் இல்லாத இடம் யாழ்ப்பாணம் என்னும் பெருமையை கெடுப்பதில் தார்த்தகரங்களும், ஒட்டறைகளும் மும்முரமாக நிற்கின்றன என்பது பகிரங்க ரகசியமாம்!

○ புதிதாக நீலச்சட்டையும் சிவப்புச் சட்டையும் போடத் தொடங்கியிருப்பவர்களும் அமைச்சரின் கூற்றை பொய்யாக்குவதில் மும்முரமாக இருப்பதாக மக்கள் பேசிக் கொள்ளுகிருர்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# அரசுக்கு ஒரு சோதனை!

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்து ஒரு கருத்தைத் திருப்பித்திருப்பிக் கூறிவருகிறது. அதாவது, அரசு தமிழ் மொழிக்கோ, தமிழ் மக்களுக்கோ எதிர்ப்பானதல்ல — தமிழரசுக்கட்சிக்கு மட்டுமே எதிர்ப்பானது என்பதே அது!

தமிழரசுக்கட்சியார் வானுலகிலிருந்து திடீரென பூலோகத்தில் குதித்தவர்களல்லர்—தமிழ் மக்களால் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டவர்கள்; தமிழ் மக்களால் தங்கள் பிரதிநிதிகள் என கடந்த 16, 17, வருடங்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள்!

எனவே தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழரசாரை எதிர்க்கிறோம் என்று கூறிக்கொண்டே அதே வாயால் தமிழரசாரைத் தெரிவு செய்தவர்களான தமிழ் மக்களை ஆதரிக்கிறோம் என்று கூறுவது தர்க்க சாத்திர விற்பன்னர்களுக்குகூட குழப்பம் விளைவிக்கும் கூற்றாகும்—

அது எப்படியோ போகட்டும் —

தமிழ் மொழியையோ, தமிழ் மக்களையோ நாம் எதிர்க்கவில்லை; தமிழரசாரை மட்டுமே எதிர்க்கிறோம் — என்ற அரசாங்கத்தின் கூற்றை வாதத்துக்காக நாம் ஏற்றுக்கொள்வோம்!

அரசின் இந்தக் கூற்று உண்மையானதுதானா — அந்தரங்க சுத்திநிறைந்ததுதானா — என்பதை அறிந்திட இப்போது அருமையான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது.

இன்னும் மூன்று தினங்களில் நான்காவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாடு, தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசத்தின் தலைநகரும் ஈழநாட்டின் மூளையாகத் திகழ்வதுமான யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிறது.

அனைத்துலகத்தமிழாராய்ச்சிமன்றம், கிஞ்சிற்றேனும் அரசியல் கலப்பற்ற — தமிழ் மொழி ஆராய்ச்சியையும் வளர்ச்சியையும் மட்டுமே ஒரேயொரு அடிப்படை நோக்காகக் கொண்ட—ஓர் நிறுவனம் ஆகும்.

இது அரசியல் கலப்பற்று விளங்கவேண்டுமென்பதற்காகவே இந்த மன்றத்தை புதுடெல்லியில் வைத்துத் தொடக்கியவர்களில் ஒருவரான பண்டிதர் கா. பொ. இரத்தினம், தாம் அரசியலில் ஈடுபடத்தொடங்கிய பின்னர், அம்மன்றத்தை விட்டு தாமாகவே ஒதுங்கிக்கொண்டார்.

அரசியல் கலப்பற்ற இந்த மன்றம், மலேசியாவிலும் இந்தியாவிலும், பாரிஸிலும் நடத்திய தனது முதல் மூன்று மாநாடுகளின் போதும், அந்த நாடுகளின் அரசுகள் பூரண உதவியளித்தன. பாரிஸ் மாநாட்டின்போது, அரசு உதவியளிக்காவிடினும், வெளி நாட்டறிஞர்கள் அங்கு செல்வதற்கு 'விசா' வழங்கமாட்டேன் என்று அது முட்டுக்கட்டை போடவில்லை.

நான்காவது மாநாடு இப்போது இலங்கையில் நடக்கவிருக்கிறது!

கிஞ்சிற்றேனும் அரசியல் கலப்பற்று — தமிழ் மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்குமாக நடைபெறும் இந்த மாநாட்டை யொட்டி இலங்கை அரசு எப்படி நடந்துகொள்ளப்போகிறது?

தனது ஆலோசனைப்படி மாநாட்டை கொழும்பில் வைக்காமல் யாழ்ப்பாணத்தில் வைக்கின்றஒரேயொருகாரணத்துக்காக அரசு பழிவாங்கப்போகிறதா? அல்லது தமிழுக்கோ தமிழ் மக்களுக்கோ தாம் எதிர்ப்பில்லை என்று அடிக்கடி கூறிவரும் அரசு, தனது சொல்லை செயலாக்கிக் காட்டப்போகிறதா?

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநாட்டை, ஏதோ பகைப்புலத்தில் நடைபெறும் ஒரு மாநாடாகக் கருதி அரசு இவ்வளவு தூரம் எதிர்ப்புக்களும் முட்டுக்கட்டைகளும் போடுவதேன்? யாழ்ப்பாணம், ஐக்கிய இலங்கையின் பகுதியிலிருந்து பிரிந்துவிட்ட பிளவுபட்ட ஒரு பகுதியென்று அரசாங்கமே தீர்மானித்து விட்டதா?

இந்த மாநாடு அரசாங்கத்துக்கு ஒரு சோதனையாக அமையப்போகிறது!

— அதாவது, ஆட்சியாளர் அடிக்கடி கூறுவதுபோல— தமிழ்மொழிக்கோ, தமிழ்மக்களுக்கோ இந்த அரசு எதிர்ப்பு இல்லையென்பது உண்மையானால், தமிழுக்காக நடைபெறும் இந்த மாநாடு வெற்றி பெற ஒத்துழைப்பு நல்கட்டும்! வெளிநாட்டு அறிஞர்கள் மாநாட்டுக்கு வருவதற்கு முட்டுக்கட்டைபோடாதிருக்கட்டும்!!

அப்படியின்றி — தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசு அடியோடு ஒத்துழைப்பு நல்க மறுத்து அதை நசுக்கமுயலுமானால்—அதன் பொருள், அரசு, தமிழ்மொழி உயர்வதை, வளர்வதை, வாழ்வதை அடியோடு விரும்பவில்லை; தமிழும் தமிழினமும் இந்நாட்டில் புகழோடு தலைதூக்கி நிற்பதை விரும்பவில்லை; தமிழை ஒழித்துக்கட்டவே அது முயல்கிறது என்பதுதான்!

அத்துடன், தமிழரசுக்கட்சியைத்தான் எதிர்க்கிறோம் - தமிழை நாம் எதிர்க்கவில்லை—நேசிக்கிறோம் என்ற ஆட்சியாளரின் கபட நாடகமும் அம்பலமாகிவிடும்!

என்ன செய்யப்போகிறது அரசு?

## உடுவில் பா. உ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமான்

''அரசியல் வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதிலும் இந்நாட்டில் சிறுபான்மைச் சமூகத்திற்கு இழைக்கப்படும் இன்னல்களையும் அநீதிகளையும் சமாளித்துச் செயற்படுவதென்பது ஊக்கமும் உள்ளத் துணிவும் உள்ளவர்களாற்றான் முடியும்.

''அத்தகைய பெருஞ் செயல் வீரர்களில் ஒருவர் தான் உடுவிற் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் என்பதில் தமிழ்ச் சமுதாயம் உண்மையிலேயே பெருமை அடையலாம். தமிழ்ச் சமூகத்தின் நீதிக்கும் உரிமைக்கும் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் போராடி வரும் நண்பர் திரு. வி. தர்மலிங்கம் அவர்களின் அரசியல் சாகசம் தமிழரசுக் கட்சிச் சரித்திர ஏடுகளில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

''தமிழ் இனத்தையும் குறிப்பாக தமிழ் இளைஞர் சமுதாயத்தையும் தட்டியெழுப்பிச் செயல் வீரர்களாக்கும் சிறந்த பணியில் திரு. தர்மலிங்கம் அவர்கள் தன்னிகரற்ற சேவை செய்துள்ளார். தமிழர் ஐக்கிய முன்னணியைத் தாங்கி நிற்கும் பெரும் தூண்களில் அவரும் ஒருவர் ஆவர். அவரின் தளரா ஊக்கமும் தன்னலமற்ற தியாகமும் தமிழினம் பெற்ற பெருஞ் செல்வங்களாகும்.

''அன்னார் நீடூழி வாழவும் மென்மேலும் பேராற்றல் பெற்றுப் பெருந்தொண்டில் இலக்கவும் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

——

## ஈழத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டறிந்ததுடன், ஈழத் தமிழர் உரிமை வாழ்வு பெற ஏற்ற நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அரசை தாம் தூண்டுவதாகவும் உறுதியளித்திருந்தார்.

''அத்தகைய ஒரு உண்மையான நண்பரை இன்று இலங்கைத் தமிழர்கள் இழந்துவிட்டார்கள். தமிழர் சமுதாயம் ஒரு சீர்திருத்த சிற்பியை இழந்துவிட்டது.

''பெரியாருக்கு நாம் செய்யக்கூடிய கைம் மாறு— அவர் கனவு கண்ட சாதிமத பேதமற்றதமிழர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் உழைப்பது தான்.''

பெரியாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தந்தி மூலம் செய்தியொன்றை 'தமிழக முதல்வர்' கலைஞர் கருணாநிதிக்கு, தமிழர் கூட்டணித்தலைவர் தந்தை செல்வா அனுப்பி வைத்துள்ளார்.

## எங்கும் பேரெழுச்சி விழாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த வெளி அரங்குகளிலும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். பொதுமக்கள் அனைவரும் பங்குபற்றக்கூடியதாக இருக்கும் இந்தக் கலை நிகழ்ச்சிகளில், வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

மாநாடு வெற்றிகரமாக நடைபெற அனைவரது ஒத்துழைப்பையும் கோரி வணதனிநாயக அடிகளார் மீண்டும் ஓர்வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த மாநாட்டை நடத்துவதில் தாம் ஒத்துழைப்பு நல்கவில்லையென சிலரால் கூறப்பட்டுவருவதை அடிகளார் முற்றாக மறுத்துள்ளார். கருத்து வேறுபாடுகளை மறந்து, பூரணமாக ஒத்துழைப்பு நல்கி, மாநாடு சிறப்புற அனைவரும் பாடுபட்டு வருகின்றனர் என்றும், அடிகளார் தெரிவித்துள்ளார். அடிகளார் மேலும் கூறியிருப்பதாவது:-

### அரசியல் தொடர்பு கிடையாது

''உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் அரசியலுக்கும் சிறிதளவேனும் தொடர்பில்லை. இதை நான் வற்புறுத்திக் கூறுவேன். அரசியலுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்பதை தெளிவாக அறிந்தவர்கள்கூட அரசியல் சார்ந்திருப்பதாக வீணே கூறிக்கொள்கிறார்கள். இருப்பினும், இதற்கு முந்திய மூன்று மாநாடுகளும் சிறப்புற நடைபெற்றதுபோல இந்த 4வது மாநாடும் சிறப்புற நடைபெறும் என்பது திண்ணம்.

''இப்போது ஐந்தாவது மாநாட்டைப் பற்றி நினைக்கத் தொடங்கிவிட்டோம். அதுஇன்னும் 3ஆண்டுகளில், மொறிசியஸ் தீவில், அல்லது சிங்கப்பூரில் நடைபெறும்.''

மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கென இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் வெளிநாடுகளிலிருந்து வந்துசேர்ந்துள்ளன. இவற்றில் 60 கட்டுரைகளை தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

தமிழக ஆளுனர் கே. கே. ஷாவும சமஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும்உள்ள தொடர்பு பற்றி ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை சமர்ப்பித்திருக்கிறார்.

சிங்கள அறிஞர்கள் பலரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

மாநாட்டையொட்டிய கலைவிழாவில் ஐம்பதுக்கும் அதிகமான கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

### கண்காட்சி

மாநாட்டையொட்டி இடம்பெறும் கண்காட்சியில் ஈழத்தையாண்ட பண்டைத் தமிழ் மன்னர் காலத்து நாணயங்களும், தமிழர் வரலாற்றை எடுத்துக்கூறும் கல்வெட்டுக்கள், மற்றும் வரலாற்றுச் சுவடிகள், தமிழ் வரிவடிவ வளர்ச்சி, தமிழ் மொழி வளர்ச்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளன. ஈழத்தமிழர் தம் பண்டைப் பெருமையை விளக்குவதாக இக்கண்காட்சி அமையும்.

### ஊர்திகள் பவனி

மாநாட்டு இறுதிநாளான சனவரி 9ம் திகதி, தமிழர்களின் வரலாற்றையும் கலாசாரத்தையும் எடுத்து விளக்கும் சரித்திர காலச் சம்பவங்களை பின்னணியாகக் கொண்டு மாபெரும் அலங்கார ஊர்திகள் பவனி ஒன்று நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவற்றையும் திரைப்படமாக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஈழநாடு கருத்து

"கட்சியரசியலுடன் சம்பந்தப்படாத தமிழாராய்ச்சி மாநாட்டை அரசியலுக்குள் இழுத்துவிட்ட பெருமை அரசாங்கத்தையே சேரவேண்டும். ஆராய்ச்சி மாநாட்டை அரசியல் மேடையாக உபயோகிக்க விரும்பாதவர்களும்கூட அதை அரசியல் மேடையாக பயன்படுத்தவேண்டிய அளவுக்கு அரசாங்கமே வழி வகுத்துக் கொடுத்திருக்கிறதென்று கூறவேண்டும்.''

—இவ்வாறு 'ஈழநாடு' பத்திரிகை அதன் 23.12.73 இதழில் கருத்தறிவித்துள்ளதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.


விற்பனையாகின்றது!

**சுஜிகலா பொங்கல் வாழ்த்து மடல்கள்**

அழகுமிகு ஓவியங்கள், அழகுத் தமிழ் காவியங்கள்.

**தேவைக்கு முந்துங்கள்**

வாழ்த்துக்களெல்லாம் கவருடன் சேர்த்து விலை குறிப்பிட்டுள்ளது

| | டிசைன்கள் | அளவு | 100க்கு | டசின் |
|---|---|---|---|---|
| நிர் 1 நவீன கட்டிங் கார்ட் லித்தோ படங்களுடன் | 15 | 10x7 | 50/- | 8/00 |
| நிர் 2 இரு மடிப்புகள் அழகிய படங்களுடன் | 20 | 6x4 | 16/- | 2/50 |
| நிர் 3 புதிய படங்களுடன் அஞ்சல் அட்டைகள் | 15 | | 10/- | 1/75 |
| நிர் 4 இரு மடிப்பு அழகிய எல்லரப் படங்களுடன் | 12 | 9x4 | 35/- | 5/00 |
| நிர் 5 இரு கோடுகள் புதிய தயாரிப்பு படங்களுடன் | 12 | 8x6 | 45/- | 7/00 |
| நிர் 6 ஸ்பெஷல் ஜப்பான் தயாரிப்பு வர்ணத்தில் பூக்கள் இயற்கைக் காட்சிகள் அடங்கிய வாழ்த்து கார்டுகள் | 50 | 8x6 | 65/- | 10/00 |
| நிர் 7 மினி கார்ட் இரு மடிப்புகள் | 10 | | 11/- | 1/50 |

சொந்த வாழ்த்து மடல்கள் தயாரித்துள்ளோம், முன்கூட்டியே ஓடர்களைத் தந்து சகல டிசைன்களிலும் வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்களும் — விற்பனையாளர்களும்:

**சுஜிகலா இண்டஸ்ரீஸ்,**

135/1, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## கல்வியமைச்சின் சமதர்மம்!

இந்திய அரசு பொதுக் கலாச்சாரப் புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களை, 'நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி அழைத்து கல்வி அமைச்சில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே அனுப்பப்பட்டிருந்தமை தமிழ் மாணவர் பலரைப்பெரும் சங்கடத்திற்குள்ளாக்கியது.

அது மட்டுமல்லாமல் கர்நாடக சங்கீதத்தில் புலமைப் பரிசிலுக்கு அழைக்கப்பட்டவர்கள நேர்முகப் பரீட்சையில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது: நேர்முகப்பரீட்சை நடத்தியவர்கள் தமிழர்களல்லரோ அல்லது தமிழ் தெரியாத தமிழரோ என்று ஐயம் மாணவர் மத்தியில் எழுந்துள்ளது.

கல்வி அமைச்சில், தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்த்துக்கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் கல்வி அமைச்சர் இதற்கு என்ன வியாக்கியானம் கூறுவாரோ என்று தமிழ் மாணவர்கள் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா,

பொது வாழ்வில் இறங்கிடுவோரில் இரு வகையினர் இருக்கின்றனர். ஒரு வகையினர்க்கு, பொதுவாழ்வு என்பது பூப் படுக்கையாகவே எப்பொழுதும் தெரிந்திடும்; பொருள் சேர்த்திடுவது—பதவி தேடிடுவது—போகம் அனுபவித்திடுவது—புகழ் சேர்த்திடுவது—இவற்றை மட்டுமே குறிக்கோளாக வைத்து தம்மைப்பொது நலவாதிகள் என்று கூறிக் கொள்வோரை நாம் கண்டிருக்கிறோம்—நாடு கண்டிருக்கிறது.

இத்தகையோர்க்கு—மக்களுக்கு தொண்டாற்றிடுவது அல்ல இலட்சியம்; பொது வாழ்வு என்கின்ற போர்வையில் மக்களைச் சுரண்டி, மாடமாளிகைகள் கட்டிடுவதும்—மங்கையருடன் சல்லாப கீதமிசைத்திடுவதும்—மதுமயக்கத்தில் மூழ்கிக்கிடப்பதும், பொருள் சேர்த்திடுவதுமே இத்தகையோரின் இலட்சியமாகும்; இதற்கு 'பொதுவாழ்வு' எனும் புனிதப்பெயரை மூடுதிரையாகப் பயன்படுத்தி வருகின்றனர் இவர்கள்!

'பொதுவாழ்வு' என்று கூறிக்கொண்டு, பல இலட்சம் ரூபாவைக் கையூட்டாக கொடுத்து 'பதவி' பெற்றுக்கொண்ட பலரை நாம் கண்டிருக்கிறோம்; பொதுவாழ்வுக்கு வருவதற்கு முன்னர், தரித்திர நாராயணர்களாக வாழ்ந்த பலர், பொதுவாழ்வில் ஈடுபடத் தொடங்கிய பின்னர் பெரும் பணக்காரர்களாகி வரும் விந்தைகளை கண்டிருக்கிறோம்.

ஆனால், பொதுவாழ்வு என்பதை புனிதமானதாக கருதி அதில் அந்தரங்க சுத்தியுடன் ஈடுபடுகின்ற தொண்டர்கள், எத்தனையோ எரிமலைகளுக்கூடாக நடைபோடவேண்டியேற்படுகிறது; கடும் புலிகளை, சிங்கங்களை, வல்லூறுகளையெல்லாம் சந்தித்து அவற்றுடன் மோதவேண்டியேற்படுகிறது; கல்லும் முள்ளும் நிறைந்த பாதையிலே கடும் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; பல சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்திட நேரிடுகிறது; சமுதாயத்தொண்டில் விசுவாசத்துடன் ஈடுபடுவதனால், தன் கைப்பொருளை இழந்து ஒட்டாண்டியாகிடவும் நேரிடுகிறது.

பொதுவாழ்வில் நேர்மையுடன் உண்மையாக உழைத்திடும் ஒருவனின் நிலையே இது வென்றால், அடிமைப்பட்டு, அழிந்துகொண்டிருக்கும் ஒரு இனத்தின்—ஒரு நாட்டின்—விடுதலைக்காக ஆதிக்கவெறி பிடித்த அரசொன்றை எதிர்த்துப்போரிடும் ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன், தன்னுடைய பொதுவாழ்வில் சந்தித்திடவேண்டிய சோதனைகளும், செய்திடவேண்டிய தியாகங்களும் எத்துணை கடினமானதாக இருந்திடும் என்பதனை எவருமே உணர்ந்து கொண்டிடமுடியும்!

விடுதலை இயக்கத்தைச் சார்ந்த தொண்டன் ஒருவனுக்கு, பொதுவாழ்வு என்பது மலர்ப்படுக்கையல்ல! எந்த நேரத்திலும், எந்த நிமிடத்திலும், அடக்குமுறை அவன் மீது ஏவி விடப்படலாம்; சிறைச்சாலை அவனை வாவென்றழைக்கலாம்! சித்திரவதைகளைச் சந்தித்திட நேரிடலாம்; சொத்துக்கள் பறிமுதலாகலாம்; நாட்டை" விட்டே கடத்தப்படலாம்; இத்தகைய சுடுகணைகள் எத்தனைதான் ஏவி விடப்படினும், விடுதலை எனும் இலட்சிய அகல்விளக்கை அணைந்துவிடாதபடி எவன் கையில் உயரத்தூக்கிப்பிடித்தபடி பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிறானோ அவனே பொதுவாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவன்!

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், மகாத்மா காந்தி, நேருஜி, போன்ற எத்தனையோ தியாக மாமலைகளைக் கண்டோம்; தமிழ் நாட்டு வரலாற்றில், பேரறிஞர் அண்ணா, பெரியார் ஈ. வெ. ரா. ராஜாஜி, போன்றோர் பொதுவாழ்வுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்கள்; நம்முடைய ஈழத்திலோ, தமிழர் தந்தை செல்வா, கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கம் டாக்டர் நாகநாதன் போன்றோர் பொதுவாழ்வு என்பது இப்படித்தான் அமையவேண்டும் என்று அதற்கு இலக்கணம் வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய பெரியவர் தந்தை செல்வா—பொதுவாழ்வில் ஈடுபட்டு அதிலே தம்முடைய சொத்து சுகங்கள் அனைத்தையுமே அர்ப்பணித்து—இன்று தம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியையே துறந்திருக்கிறார்கள்.

அமரர்களாகிவிட்ட கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கமும் டாக்டர் நாகநாதனும், பொதுத் தொண்டிலே ஈடுபட்டு—தங்கள் வருவாயையும் உடல் நலத்தையும் இழந்து தமிழர் சமுதாயத்துக்காக உயிரையே தந்தவர்கள்!

அந்தப் பெருந் தலைவர்களின் வரிசையிலே—இன்றைக்கு தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காக தன்னுடைய நேரம், நினைப்பு உழைப்பு அத்தனையையும் அர்ப்பணித்துவரும் சிலரில் நம்முடைய உடுவில் பா. உ. அண்ணன் வி. தருமலிங்கம் அவர்களும் ஒருவராவர். அவர் பொது வாழ்வில் ஈடுபட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதனையிட்டு இவ்வாரம் அவருக்கு ஓர் 'பாராட்டு விழா எடுக்கின்றனர் ஆர்வமிக்க நண்பர்கள்!

தமிழர் சமுதாயத்தின் மீட்சிக்காக அண்ணன் தருமலிங்கம் ஆற்றிவருகின்ற அரும் பணிகள் ஏராளம், ஏராளம்! தான் ஏற்றுக் கொண்ட இலட்சியத்துக்காக—தான் சார்ந்து நிற்கும் அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்து நின்று தன் முழுநேரப் பணியையுமே அர்ப்பணித்துவருகிறார் திரு. தருமலிங்கம் அவர்கள்!

திரு. தர்மலிங்கம் அவர்களைப் பற்றி, அவரது வெள்ளிவிழா மலரில் பிரபல எழுத்தாளர் 'சிவா—சரவணன்' அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:—

''தன்னை மறந்து தன்னலம் மறுத்துப் பிறர் நலம் பேணுவதே உண்மையான பொதுச் சேவையாகும்; மகத்தான மக்கட் சேவையாகும்.

''இதில் ஈடுபடுவோருக்கு நெஞ்சத் துணிவு வேண்டும்; நேர்மைத் திறனும் வேண்டும்; தியாக சிந்தை வேண்டும்;

## நல்லவருக்கு வெள்ளி விழா

தெய்வ பக்தி வேண்டும்; தேசபக்தி வேண்டும்.

''தலைவனாக வழி நடத்தும் ஆற்றல் வேண்டும். தொண்டனாய் வழி நடக்கும் அடக்கமும் வேண்டும்.

''இத்தகையோர் தம் மெய்வருத்தம் பாரார்; பசி நோக்கார்! கண் துஞ்சார்.

''இவர்கட்குக் கட்டிலும் ஒன்றுதான்; கட்டாந்தரையும் ஒன்றுதான்; பஞ்சணை மெத்தையும் ஒன்றுதான்; பரட்டை வெளியும் ஒன்றுதான்.

''பொல்லடியைப் பூமாலையாகக் கொள்வர். சொல்லம்புகளைத் தம் நல்லன்பினால் வெல்வர்.

''இன்பம் என்பது மதுவிலும் மாதரிலும் கிடைப்பதன்று. மற்றைய மாந்தரின் மனம் நிறைந்த வாழ்க்கையிலே மட்டற்ற இன்பம் காண்பவர்கள் இவர்கள்.

''ஏழைகளின் சிரிப்பிலே இன்பத்தை மட்டுமல்ல, இறைவனையும் காண்பவர்கள்.

''தம் சொத்தையும், சுகத்தையும், சொகுசான வாழ்க்கையையும் துச்சமாக மதிப்பவர்கள்.

''அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டோரின் அவலத்தைப் போக்க அல்லும் பகலும் அந்தரங்க சுத்தியுடன் அயராது பாடுபடுபவர்கள்.

''இத்தகையபொதுச் சேவையினால் தனக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களையும், நஷ்டங்களையும் நன்கு உணர்ந்து கொண்டே அதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் உயர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்.''

ஈழத் தமிழர்களின் இன உரிமைக்கும் விடுதலைக்குமாக குரல் கொடுத்துவரும் அண்ணன் தர்மலிங்கம்—வங்க மக்கள் சுதந்திரப் போராட்டத்திலீடுபட்ட நேரத்தில், அவர்கள் யெஹியாகானின் மிருக வெறிக்கு இரையாக்கப்பட்ட போது—அதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வீரக் குரலெழுப்பி இலங்கையினதும், உலகத்தினதும் கவனத்தை வங்கத்தில் நடைபெற்ற கொடுமையின் பால் திருப்பி விட்டு—வங்க மக்களின் கண்ணீரைத் துடைத்திட எடுத்த முயற்சிகளை விடுதலை விரும்பிகள் ஒருபோதுமே மறந்திட முடியாது!

அநீதி எங்கு நடந்தாலும், அதற்கு எதிராக குரல் கொடுக்கும் திண்மை உள்ளம் தர்மலிங்கத்தின் தங்க உள்ளம்!

இன்றைக்கு தேசிய அரசுப்பேரவையிலே—அவர் பேசாத நாளெல்லாம், ஈழத் தமிழர்களைப்பொறுத்தவரை இருண்ட நாட்களாகவே இருக்கின்றன. தமிழர்களின் எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் அவரே குரல் கொடுத்து வருவதைக் காணுகிறோம்!

உண்மையான சோசலிசவாதியாக விளங்கும் அண்ணன் தருமலிங்கம், தேசிய அரசுப் பேரவையில்—போலிச்சோசலிச வாதிகளின் புரட்டுக்களை உடைத்தெறியும் போதெல்லாம்—டாக்டர் என். எம். பெரேராவும், கொல்வின் ஆர். டீ. சில்வாவும், பீட்டர் கெனமனும் படுகின்ற பாடுகளை—நேரில் பார்த்தால்தான் அவரது வாதத்திறன் புரியும்!

இன்றைக்கு, அண்ணன் தருமலிங்கம் அவர்களின் இருபத்தைந்து ஆண்டுகாலசேவையைப் பாராட்டி தமிழ் இளைஞர்கள் விழா எடுக்கின்றனர் என்றால்—அந்தப் பாராட்டின் பின்னால் சிறிது சுயநலமும் தொக்கி நிற்கிறது என்றே கூறுவேன்:—அதாவது தர்மலிங்கம் அவர்களைப் பாராட்டுவது, 25 ஆண்டுகாலம் சேவையாற்றி விட்டீர்களே இனி சற்று ஓய்வு எடுங்கள் என்று கூறுவதற்கல்ல—கடந்த 25 ஆண்டுகாலத்தில் செய்தசேவையை விட, இன்னும்பலமடங்காக அடுத்த25 வருடத்தில் அவர் சேவையாற்றவேண்டும் என்பதேஇந்தவெள்ளி விழாவின் உள்ளார்ந்த நோக்கமாகும்! அண்ணன் தர்மலிங்கம் அவர்களைத் தட்டிக்கொடுத்து, அதிகவேலை வாங்குவதே வெள்ளி விழாவின் பின்னுலுள்ள சுயநலமாகும்!

நண்பா, தர்மலிங்கம் அவர்களை தமிழ் ஈழத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் என்று நம்மவர்கள் நகைச்சுவையுடன் கூறிடுவது வழக்கம். 'தமிழ்ஈழம்' சுதந்திரம் பெறும் போது—தர்மலிங்கம் அவர்கள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பதவியை அலங்கரித்திடவேண்டுமென்பதே இளைஞர்களின் பேரார்வமுமாகும்!

இதைக்கேட்டிடின், பதவிபெறுவதற்கா நாம் தமிழர் விடுதலைக்காகப்போராடுகிறோம்?—சுயநல நோக்கம் சிறிதுமே வரக்கூடாது நம் சிந்தனையில் என்பார் அண்ணன் தர்மலிங்கம்!

ஆனாலும்—நமது ஆசைக்கு சொல்லி வைப்போம்—நமது தமிழ் ஈழத்தின் 'நிழல் மந்திரி சபை'யின் (Shadow Cabinet) வெளிவிவகார அமைச்சர் தர்மலிங்கம் அவர்களின் வெள்ளி விழா சிறக்கட்டும்! அவரது சேவை மேலும் தமிழினத்துக்கு கிடைக்கட்டும்! அவருக்கு நீண்ட ஆயுளையும், உறுதியான உடல்நலத்தையும் தமிழ் அன்னை அருளட்டும்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

---

### பெரியார்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பாடுகிறார், இன்று செந்தமிழுக்காக சிறையிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பெரியாரைப்பற்றி!

அத்தகைய பெரியார் எடுத்துரைத்த தத்துவத்தை—ஏற்றிவைத்த பகுத்தறிவுச் சுடரை—ஈழத் தமிழகம் எங்கும் கொண்டு செல்வோம்! சாதி, மத பேதமற்ற—மூட நம்பிக்கைகளற்ற—அறிவு மிக்க தமிழர் சமுதாயத்தை—இங்கு உருவாக்குவோம்!

பெரியார் தமிழ் நாட்டில் காட்டிய அதே வழியில் இங்கு தமிழை அழிக்கவரும் சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்துப்போராடுவோம்!

பெரியார், ஒரு சுதந்திரத் தமிழ் நாடு அமையவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அவரது ஆசையை, ஈழத் தமிழர்களாகிய நாம் நிறைவேற்றி—ஒரு சுதந்திர ஈழத் தமிழ் நாட்டை உருவாக்குவதற்கு உழைத்திட உறுதியெடுப்போம்!

பெரியாரின் புகழ் வாழ்க! அவர் விட்டுச்சென்ற தத்துவங்கள் வளர்க!!

### தோட்ட......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை நிறுத்தம் இன்னும் வேகம் அடைந்துள்ளது.

அரசு சார்பான தொழிற் சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களே, பல இடங்களில் தமது சங்கத்தின் கொள்கைக்கு முரணாக வேலை நிறுத்தத்தில் இறங்கி வருகிறார்கள்.

நிதியமைச்சரின் கூற்றை எதிர்த்து ஜனுப் அசீசின் ஜ. தொ. கா. வும் மூன்று நாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் இறங்கியுள்ளது.

வெற்றி அல்லது வீர மரணம்—இதுவரை [illegible] காணும்வரை இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றே தீரும் என்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற் சங்கத் தலைவர்கள் மீண்டும் உறுதியுடன் தெரிவித்துள்ளனர்.


### நத்தார் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் எமது உளங்கனிந்த நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி "காந்தி நீதிக்கலண்டர்" ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Ceylon is now An island Completely Divided An Ireland Without A Frontier'

— 'London Observer'

தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களது அறக்கட்டளையிலிருந்து வெளியிடப்படும் 'உரிமை வேட்கை' என்ற அரசியல் வார ஏட்டில் 'செம்பியன்' என்பவர் எழுதிவரும் இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றிய தொடர் கட்டுரையின் முதல் பகுதி 16-12-73 சுதந்திரனில் இடம் பெற்றிருந்தது. இரண்டாவது பகுதி இங்கு இடம் பெறுகிறது.

இலங்கையின் புதிய வரலாறு 1948ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் தொடங்குகின்றது. 1948-ம் ஆண்டிலிருந்து 1964 வரை, ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஏற்றம் பெற்றது. இலங்கை பொதுநலக கூட்டு நாடுகளில் (Commonwealth of Nations) ஒன்றாகவே இருந்து, தன் ஏற்றுமதிப் பொருள்களுக்கு 'ஐரோப்பியப் பொதுச் சந்தை' (European Common Market) யில் கூட தகுந்த இடத்தைப் பெற்றுக்கொண்டது.

பல ஐரோப்பிய நாடுகள் அதன்வாடிக்கை நாடுகளாக இன்றும் உள்ளன. இலங்கையின்பொருளாதார வளர்ச்சி மிதமிஞ்சியதுஇல்லைஎனினும் தன்னிறைவுக்கு அதனால் எளிதாக வழிகோலிக் கொள்ள முடியும். அங்கே வாழும் மக்கள் அனைவருக்கும் ஏற்பான வசதிகள் அனைத்தையும் தருவதற்கு அதன் தேயிலை உற்பத்தியே போதுமானது. ஏனெனில் உலகின் சிற்சில பகுதிகளில் மட்டுமே தேயிலை உற்பத்தி உள்ளது. உலக நாடுகளில் பெரும்பாலானவை தேயிலையை இறக்குமதியே செய்கின்றன.

## பொருளாதார வளர்ச்சி தமிழர் தந்தது

இலங்கையின் கனிவளமும் அந்த நாட்டின் தேவைக்கேற்றதே. அதன் உணவு உற்பத்தியும் நிறைவையுடையது. இந்த நிலையில் அதன் பொருளாதார வளர்ச்சி முதல் பத்தாண்டுகளிலேயே பெருமையடையுமளவுக்கு உயர்ந்ததில் வியப்பேதும் இல்லை. எனினும், இலங்கையின் பொருளாதர முன்னேற்றத்திற்கு அங்கே 40% தமிழர்கள் ('மூர்கள்' உட்பட) தந்த உடலுழைப்பு அறிவுத்திறன், 'முதனிலைத் திட்ட' முனைப்பு, திட்ட வளர்ச்சியில் மிகு நாட்டம், பொதுப் பங்கீட்டு முறைக்கு முழு இசைவு ஆகியவையே காரணம். "If the Tamils who provide almost all labour of the Ceylon's tea industry decide to join in, they could cripple the country's economy"—

"இலங்கையின் தேயிலைத் தொழிலில் முழுக்க முழுக்க உழைப்பைத் தரும் தமிழர்கள் ஒருங்கே சேர்ந்தால், அந்நாட்டின் பொருளாதாரத்தையே முடமாக்கிவிட முடியுமென" நியூயார்க் டைம்ஸ் (25-4-61) தன் ஆசிரியவுரையில் எழுதியது.

இந்தக் கருத்தைப் பற்றி 'சிங்களவர்'களைக் கேட்டால் கூட ஆம் என்றுதான் சொல்வார்கள்.

பிரிட்டிஷ் தீவுகள் வளமோடு வாழ்வதற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஸ்காட்லாந்துக்காரர்கள் வியர்வை சிந்தி வந்தது போல, தமிழர்கள் இலங்கை மண்ணில் எலும்பொடிய உழைத்தார்கள். அதனால் தான் இலங்கை வரலாற்றாய்வாளர்கள் அவர்களை 'Scots of Ceylon' என்றே அழைத்தனர்.

## இலங்கையின் அயர்லாந்தானது!

இலங்கையில் செழுமைபடச் செய்த தமிழர்களை 1956 ஆம் ஆண்டிலிருந்து 'சிங்களவர்கள்' இரண்டாந்தர குடிமக்களாக நடத்தத் தொடங்கினர். அதற்கு முன் மேலோட்டமாக இருந்த வேறுபாட்டுணர்வு பின் காழ்ப்பாகி, இருதிறத்தினரும் தங்களுக்கிடையே பகைமைச் சுவர் எழுவதைத் தெளிந்தனர். ஆட்சி 'சிங்களவர்' கைகளில் இருப்பதால் சட்டங்கள் அவர் தம் எண்ணங்களுக்கேற்ற வாறு வளைக்கப்பட்டன; சில அடிப்படைச் சட்டங்களே முறிக்கப்பட்டன; பல திருத்தப்பட்டன. இதனையே, 'அப்சர்வர்' (Observer) என்ற இதழ்

"Ceylon is now an island completely divided, an Ireland without a frontier"

"இலங்கை இன்று முழுவதாகப் பிரிந்த நிற்கிறது; அது இன்று எல்லைக்கோடு இட்டுக்கொள்ளாத அயர்லாந்து!" என்று (லண்டன், 5-7-61) எழுதியது.

## 1958ன் மொழிப்போர்! முதல் உள்நாட்டுப்போர்

1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அன்றைய இலங்கை அரசின் மொழிச் சட்டத்தை எதிர்த்து, தமிழர் கட்சிகள் ஒன்று கூடிப் போராடின. சிங்கள மொழிக்கு முதன்மையளிக்கும் அந்தச்சட்டத்தை எரித்தும், அரசு அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பரித்தும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டும் தமிழர்கள் போராடினார்கள். தமிழ் இளைஞர்கள், இரத்தம் சிந்த முன்வந்தனர்.

அன்றைய தலைமையமைச்சர் திரு. பண்டாரநாயகா, காவலர்களிடம் தமிழ்ப் பகுகளில் துப்பாக்கிச் சூடு நடத்த ஆணையிட்டார். இருவார காலமாக நடந்த துப்பாக்கிச் சூடுகளைக் கண்டு தமிழ் இளைஞர்கள் வெகுண்டெழுந்தனர். அதன் பயனாக 400க்கு மேற்பட்ட இளைஞர்கள் உயிரிழந்தனர். 12,000க்கு மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்தனர். இந்த மொழிப்போர் இலங்கை விடுதலை பெற்ற பின் கண்ட முதல் உள்நாட்டுப் போர். (Christian Science Monitor—1958)

## 'சிங்கள வெறி'யின் அணைப்பில்!

1965ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல்கள் நடந்தன. யுனைடெட் நெஷனல் கட்சி (U.N.P) வெற்றிபெற்றாலும் ஆட்சியமைக்கும் பெரும்பான்மையை அக் கட்சி பெற்றிருக்கவில்லை. எனவே அதன் தலைவர் டட்லி சேனநாயகா தமிழர் கட்சிகளான பெடரல் கட்சி தமிழ் காங்கிரஸ், இரண்டின் துணை பெற்று ஆட்சி அமைத்தார்.

அதே நேரத்தில் சிங்கள வெறி கொண்ட ஜாதிகா விமுக்தி பெறமுனு (J V P) என்ற கட்சியையும் தன்பால் அவர் சேர்த்துக் கொண்டார். இது வியப்புக்குரிய அம்சம் என்றாலும், சேனநாயகாவின் கட்சியையே தன்மயமாக்கிக் கொள்ள அந்தச் சிங்களவர் வெறி கொண்ட கட்சி முயன்றது. அது தன் முயற்சியில் சற்றே வெற்றியும் கண்டதெனலாம். நடுநிலையாக இருக்க வேண்டிய அரசு ஜே. வி. பி.யின் காரணமாக சிங்கள வெறிக்குத் துணைபோக வேண்டிய கட்டங்களுக்கு வந்தது.

## உலக புத்த மத மாநாட்டில் சேனநாயகா வேண்டுகோள்

1966ஆம் ஆண்டில் சேனநாயகா தமிழரையும் சிங்களப் பௌத்தர்களையும், கிறித்துவர்களையும் நேயமுடன் இருக்க முயற்சிகள் பல செய்தார். தமிழ்த் தலைவர்களையும் பௌத்த மதத் தலைவர்களையும் ஒருங்கே அழைத்து வைத்து அடிக்கடி பேசினார்.

1958ஆம் ஆண்டின் மொழிச் சட்டத்தில் சேனநாயகா பல திருத்தங்களைக் கொண்டு வந்தார். அதிகாரிகள் நினைத்தால் தமிழ் மொழி நலனைப் புறக்கணிக்கலாம் என்ற நிலையை மாற்றினார். 1966ஆம் ஆண்டு சனவரி 8ஆம் நாள் அந்தத் திருத்தங்களைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றினார்.

அந்தத் திருத்தங்களை எதிர்த்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அந்தக் கட்சிகளின் தொழிற் சங்கங்களும் போராட்டம் நடத்தின. அவை ஏற்படுத்திய கலவரங்கள் அரசுக்கு பல கோடி ரூபாய் சேதத்தை ஏற்படுத்தின.

அந்த ஆண்டில் பெடரல் கட்சியின் பொதுப் பேரவைக் கூட்டத்தில் சேனநாயகா கலந்து கொண்டு, சிங்களவரும் தமிழரும் ஒன்றுபட வேண்டுமென்றும் அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்வேன் என்றும் முழக்கமிட்டார்.

அந்த ஆண்டில் கொழும்பில் நடந்த உலக புத்த மதத்தினர் மாநாட்டில் புத்த மதத்தினரைத் தமிழர் நலனைப் பாதுகாக்குமாறு வேண்டிக்கொண்டார். இந்தச் செயல், சிங்களவர்—தமிழர்க்கிடையே இருக்கும் மோதல் தெளிவானதும் கொழுந்து விட்டெரிவதும் என்ற உண்மையை உலகிற்குணர்த்தியது.

## வெள்ள நிவாரணப் பணிகள்!

1967ஆம் ஆண்டு அக்டோபர், டிசம்பர் மாதங்களில் தமிழர் வாழும் வடக்கு, கிழக்குப், பகுதிகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இருபது ஆண்டுகளாக காணாத கடும் வெள்ள நிவாரணப் பணிகளைச் சேனநாயகாவின் அரசு செய்யத் தொடங்கியதும், சிங்களவர் கட்சிகள் அவற்றைத் தடுக்கத் தொடங்கின. தம் வாழ்வைக் கெடுக்க சிங்களவர்கள் தயங்கப் போவதில்லை என்பதைத் தமிழர்கள் அறிந்து கொண்டனர்.

## விசாரணைக் குழுவின் அறிக்கை

1967 ஏப்ரலில் இலங்கைத் தேயிலைத் தொழிலின் நூறாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டில் இலங்கை அரசு நியமித்த 'தேயிலைத் தொழில் விசாரணைக் குழு (A commission of Inquiry on the Tea Industry), தன் அறிக்கையில்,

"தேயிலைத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள். அவர்கள் பேரளவு, S. W. R. D. பண்டாரநாயகாவின் ஆட்சிக் காலச் சட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ...குடியுரிமை அளிக்கப்பட வேண்டிய தொழிலாளர்கள் மறுக்கப்பட்டுள்ளனர்" என்று அறிவித்தது.

அந்த அறிக்கையில் கண்டுள்ள உண்மைகள் தமிழர் தம் நலன்கள் எவ்வளவு தூரம் 1948லிருந்தே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றது.

## பொருளாதார ரீதியில் தமிழர் ஒடுக்கப்படுகின்றனர்

1967 மார்ச்சில் சிங்களவர் வாழும் பகுதிகளில் தொடங்கப்பட்ட எஃது உருளை ஆலை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆகியவற்றின் நிர்வாகிகளால், வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் (90%) சிங்களவர்களே.

அந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சி நிதிக் கழக திருத்தச் சட்டம் (Development Finance Corporation (Amendment) Act), சேனநாயகா சிங்களவருடன் ஐக்கியமாகி, தமிழரைப் புறக்கணிக்கத் தொடங்கி விட்டார் என்பதை உணர்த்தியது. அந்தச் சட்டத் திருத்தத்தைத் தொடர்ந்து தேசியப் பணி மசோதா (National Service Bill) என்ற, இளைஞர்களைத் தேசியப் பணியில் ஈடுபடுத்தும் சட்டம் நிறைவேற்றப் பட்டது.

அச் சட்டத்தின் காரணமாக அமைக்கப் பட்ட இளைஞர் அணிகளில் தமிழ் இளைஞர்கள் முழுக்க முழுககப் புறக்கணிக்கப்பட்டனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (Ceylon Workers Congress) 1967 டிசம்பர் மாதம் முழுவதும் போராட்டங்களை நடத்தின.

## தமிழர் வேண்டுகோள்!

தமிழர் பகுதிகள் பொருளாதார வளர்ச்சியடைவது தடுக்கப்படுகின்றன என்பதைத் தமிழர் அனைவரும் தெரிந்து கொண்டதும், தங்களுக்கென மாவட்ட நிர்வாகக் குழுக்களை அமைக்க வேண்டுமென வேண்டினர். அதற்கு முதலில் ஒப்புக் கொண்ட சேனநாயகா பின்னர் மறுத்தார். தமிழர்கள் போராடத்தொடங்கினார்கள். ஏறக்குறைய ஆறு மாதங்கள் தமிழ்ப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டங்கள் அமுல் படுத்தப்பட்டிருந்தன.

## திருக்கோணமலைப் பகுதியில் சிங்களவர் குடியேற்றம்!

திருகோணமலை இலங்கையின் இயற்கையான துறைமுகம். வடகிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. வடக்கும் தெற்கும், மலைகள் சூழ்ந்திருக்க, கடல் உள்ளே புகுந்து ஆழமான துறைமுகத்தைத் தந்துள்ளது. இந்தத் துறைமுகப் பகுதி வளங்கொழுவியது. இதனைச் சுற்றிலும் தமிழர்கள்தான் நெருக்கமாக வாழ்ந்து கொண்டுள்ளனர். இலங்கையரசு திருகோணமலைப் பகுதியில் சிங்களவர் குடியேற்றத்திற்கு வழிவகை செய்தது.

## தமிழர்க்கெதிராக, கம்யூ. தொழிற்சங்கங்கள்!

1968 ஜூன்மாதம் சோவியத் ரஷ்யாவின் கடற்படைக் கப்பல்கள் கொழும்புக்கு வந்தன. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக சோவியத் கடற்படைக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தன. அன்றிருந்தே இந்துக் கடலில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் வல்லரசுகள், இலங்கையினைத் தம்பால் ஈர்த்துக்கொள்ள கடுமையாக முயற்சிகள் செய்து கொண்டு வருகின்றன. அவை 'சிங்களவர்' ஆட்சிக்கு, சிங்கள வெறியர்களுக்கு ஆதரவாக இருப்பதே முறையென்றும் கருதுகின்றன. எனவே தான் வலது, இடது கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்கள் தமிழர் நலன்களைப் பேண முன்வருவதில்லை. சிங்களவர்க்கே துணைபோகின்றன.

(தொடரும்)

# மாற்றட்டும் போக்கை

—யோகா கோபாலசிங்கம்

மலையகத்தின் புரட்சிக்கீதம் வானைமுட்டுது — நாட்டை
வாழவைத்த கரங்களின்று போர்தொடுக்குது
அழுதஓய்ந்த விழிகள்தன்னில் ஒளிபிறக்குது — அரசு
ஆட்சி கண்டு வேரறுந்து நிலைகுலையுது

பொறுத்தநெஞ்சம் எரிமலையாய் வெடித்துவிட்டது-நாளை
புதியபாதை காணப்புறப் பட்டுவிட்டது
கறுத்தமேகம் மலையகத்தை சூழ்ந்துவிட்டது — வெற்றிக்
களிப்பில்ஆடும் காலம்நம்மை நெருங்கிவிட்டது

கண்ணைமூடி அறிவைக்கட்டி வழிநடத்தினர்—நம்மை
கள்ளத்தோணிக் காரரென்று பட்டம்கட்டினர்
உண்ணும்உணவை கூடஇன்று தரமறுக்கிறார்—நாளும்
உழைத்துழைத்து ஓடாய்ப்போக வழிசமைக்கிறார்

பிறந்தநாட்டின் உரிமையற்று வாழ்ந்ததுபோதும்-உன்னை
பிடித்திருந்த மூடக்கொள்கை நிலைத்ததுபோதும்
வறுமைநாளும் போட்டுவாட்டி வதைத்ததுபோதும் —
நாட்டை
வாழவைக்க உழைத்துநித்தம் மடிந்ததுபோதும்

உருக்குப்போன்ற கரமிருந்தும் என்னடாலாபம் —
உழைத்து
உருக்குலைந்து மாழ்வதுவோ போட்டிட்டசாபம்
நெருப்பைவயிற்றில் கட்டிக்கொண்டு வாழ்வதோ
வாழ்க்கை—அரசு
நிலைத்துவாழ வேண்டுமென்றால் மாற்றட்டும் போக்கை.

காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சிறையில் இன்று
569-வது நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கலைஞர்களிடையே ஏன் பாரபட்சம் காட்டுகிறீர்கள்?

## பேரவையில் தருமர் கேள்விக் கணைகள்!

'உலகப்புகழ் பெற்ற சித்தார் மேதை ரவிசங்கர் இன்று இலங்கை வந்திருப்பதாக அறிகிறேன். இதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இப்படியான மேதைகள் இங்கு வருவது நல்லது.

'வட இந்தியரான ரவிசங்கரின் இலங்கை விஜயத்திற்கு அரசாங்கமும் பூரண ஒத்துழைப்புக் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ரவிசங்கரின் இசை நிகழ்ச்சிகள் மூலம் பெரும் பணம் கிடைக்கும். அதில் ஒரு பகுதியை அவருக்குக் கொடுத்தாலும் பரவாயில்லை. இப்பணத்தை "டைம்ஸ்" நிறுவனம் ஒழுங்காகச் செலவிடும் என்பது என்து நம்பிக்கை.

"இதையிட்டு எமக்கு எந்தக் குறைபாடும் கிடையாது ஆனால் இதே போன்று தென்னிந்தியாவில் உள்ள சிறந்த கலைஞர்களை இங்கு அழைத்து கௌரவிக்க அரசாங்கம் இடமளிக்க மறுக்கிறது. இதுதான் எமது குறைபாடு.

"ரவிசங்கரைப் போன்று பல துறைகளில் சிறந்த கலைஞர்கள் தென்னிந்தியாவிலும் உள்ளனர்: இவர்களை அழைக்க யாராவது விரும்பினுல் அதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்க மறுக்கிறது. இது ஏன்?

"அண்மையில் அரசின் அதிகாரத்திலுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூட சில தென் இந்தியக் கலைஞர்களை அழைத்து கலை நிகழ்ச்சிகளை நடாத்த முன் வந்தது. ஆனுல் இதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்து விட்டது.

"இந்த அரசாங்கம் வட இலங்கை எம். பிக்களை வெளிநாடு செல்ல அனுமதிக்க மறுக்கிறது இலங்கையை வடக்கு, தெற்கு எனப் பிரித்துப் பாரபட்சம் காட்டுகிறது.

"இதே போன்று அரசாங்கம் இந்தியாவையும் வடக்கு தெற்கு எனத்தான் பிரித்துப் பார்க்கிறதோ என அறிய விரும்புகிறேன்"—

'அரசாங்கம் கெசட் மூலமே இன்று நாட்டின் நிர்வாகத்தை நடத்திவருகிறது கெசட்தான் இன்று சர்வமுமாக இருக்கிறது. கெசட்தான் அரசாங்கமாகவும் அரசாங்கம்தான் கெசட்டாகவும் இருக்கிறது. எனவே கெசட் தாமதமின்றி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் சேவை மாற்ருந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது. நமது நாடு சுதந்திர நாடு என்று கூறிக்கொண்டு வானெலியில் ஆங்கிலத்திற்கு இரண்டு சேவைகளை நடத்துகிறது. இதில் முதலாவது சேவையை நிறுத்திவிட்டு அந்த மீட்டரைத் தமிழுக்குப் பயன்படுத்தலாம்;

யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இலங்கை வானெலியின் ஒலிபரப்புகளை ஒழுங்காகக் கேட்க முடியவில்லை; இதனுலேயே நாம் இந்திய வானெலியைக்கேட்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தமிழ் சேவை இரண்டின் ஒலிபரப்பு நேரத்தை இரவு 11 மணி வரை நீடிக்கவேண்டும்.

'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அரசியல் தலையீடுகள் அதிகமாக இருக்கின்றன. இதனை இரண்டு அமைச்சர்கள் நிர்வாகம் செய்கின்றனர்'.

திரு. ஆர். எஸ். பெரேரா:—'நான் இதனை ஆட்சேபிக்கிறேன். வானெலிமுற்றிலும் எனது பொறுப்பில்தான் இருக்கிறது.'

திரு. தர்மலிங்கம்:- தபால் அமைச்சர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிட்டு வருகிருர். இதற்கு என்ன கூறுகிறீர்கள்?

திரு. ஆர். எஸ். பெரேரா: 'அவர் உத்தரவிடுவதில்லை. வேண்டிய ஆலோசனைகளைக் கூறி வருகிருர்;

திரு. தர்மலிங்கம்: அதனை நாம் எதிர்க்கிறோம். அவரது ஆலோசனையைக் கேட்டால் அது ஆபத்தில்தான் முடியும்.'

'பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படும் அச்சிடும் கடதாசியின் கோட்டா குறைக்கப்பட்டுள்ள இவ்வேளையில் 'புயல்' என்ற பத்திரிகைக்கு எப்படி அச்சிடும் கடதாசி கிடைக்கிறது! இப்பத்திரிகைக்கு பல அரசு விளம்பரங்கள் கிடைக்கின்றன. இவை எப்படி கிடைக்கின்றன; இப்பத்திரிகையை அச்சிடுவது யார்? இதற்கும் அரசாங்க பிரமுகர்களுக்கும் உள்ள உறவு என்ன என்பதை அமைச்சர் விசாரிக்க வேண்டும்;

பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் கோட்டா குறைக்கப்பட்டுள்ள இச்சமயத்தில் 'டைமஸ்' நிறுவனம் புதிதாக தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறது. இப் பத்திரிகைக்கு புதிதாக கோட்டாகொடுக்கப்பட்டதா?

திரு. ஆர். எஸ். பெரேரா: நான் யாருக்கும் கோட்டா வழங்குவதில்லை;

திரு. தர்மலிங்கம்: நீங்கள் கோட்டாகொடுக்க முடியாவிட்டாலும் கொடுக்கும்படி சிபார்சு செய்யலாமல்லவா இவ்விஷயத்தைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

●

'வட்டுக்கோட்டை முன்னுள் எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் மகன் இந்தியாவில் படிக்கிருர். இவர் தமது மகனுக்கு அனுப்பும் கடிதங்களும், மகன் தந்தைக்கு எழுதும் கடிதங்களும் உரியவர்களுக்குக் கிடைப்பதில்லை.

'எனவே மற்றவர்களின் கடிதத்தை உடைத்துப் பார்க்கும் சட்ட விரோதச் செயலில் தபால், தந்தித் திணைக்களம் ஈடுபடுகிறதா என அறிய விரும்புகிறேன்'

---

# 'நிழலுடன் போராடுகிறீர்கள்!"

## சூரியருக்கு பண்டிதர் சாட்டை!!

'தமிழர் கூட்டணி உறுப்பினர்களாகிய நாங்கள் உரிமைகளுக்காகவே அமைச்சர்களுடன் மோதுகிருேமே தவிர தனிப்பட்ட முறையில் அல்ல.

"இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மூவர் — கல்வியமைச்சர், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர், தபால் அமைச்சர் ஆகிய மூவருமே தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய எம்மைப் புறக்கணிப்பதில் முதலிடம் வகிக்கின்றனர். தபால் அமைச்சரின் ஆலோசனைதான் மற்றவர்களையும் அப்படிச் செயல்பட வைக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. எனவேதான் இவர்களின் போக்கை நாங்கள் எதிர்க்கிருேம்.

குமாரசூரியர்:- எதிர்ப்பு இருந்தால் பரவாயில்லை— நீங்கள் கொலைசெய்யவும் அல்லவா தலைப்பட்டீர்கள்?

பண்டிதர்:- அப்படி ஒன்றும் இல்லை; நீங்கள்தான் சும்மா நிழலுடன் போட்டி போடுகிறீர்கள். நீங்கள்தான் எதுவித காரணமுமின்றி 42 தமிழ் இளைஞர்களைப் பிடித்து கடந்த பல மாதங்களாக சிறையில் தள்ளியிருக்கிறீர்கள்!

"உங்கள் தபால் அமைச்சு நிர்வாகத்தில் குறிப்பாக துணை அஞ்சல் அதிபர் நியமனங்களில் ஊழல் மலிந்திருக்கிறது. இதைப் போக்க முயலுங்கள்!

தபால் மந்திரி தமிழ் மக்களின் பிரதிநிதி என்று கூறப்படுவதை, அரசியல் நாகரீகம் தெரிந்த எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர் தமிழ் மக்களின் பிரதிநிதியல்ல — உண்மையில் பிரதமரின் பிரதிநிதிதான்!

பதிவுச் சீட்டுத் துண்டில் தமிழ் இடம்பெறவில்லை; எல்லா அஞ்சல் நிலையங்களிலும் தமிழில் திகதி முத்திரையை போடுவதற்கும் இதுவரை நடவடிக்கையெடுக்கப்படவில்லை. இது பற்றி எத்தனையோ முறை அமைச்சருக்கு சுட்டிக்காட்டியும் எதுவித பயனுமில்லை;

இவற்றை செய்ய இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அமைச்சர் கூற வேண்டும்!

சரவணையில் உபதபால் நிலைய திறப்பு விழா அழைப்பிதழ் சிங்களத்திலேயே இருந்தது — தமிழில் இல்லை. தபால் அமைச்சிலிருந்து வரும் கடிதங்கள் அழைப்புக்கள் சிங்களத்தில்தான் எனக்கு வருகின்றன.

"இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கதிரவேலு என்பவர் தொலைபேசியை திறப்புவிழாவன்று உபயோகித்தார். இதற்கான கட்டணத்தை அவர் செலுத்தினுரா?"

—இவ்வாறு அஞ்சல் துறை அமைச்சு மானியம் மீது பேசிய காவலூரர் பா. உ. பண்டிதர் இரத்தினம் குறிப்பிட்டார்.

---

# இலக்கியச்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது' எனக் கிண்டல் செய்து, 'போகட்டும்— அது ஆராய்ச்சி என்றே வைத்துக் கொள்வோம்' என்று ஏதோ பெரியமனது பண்ணி ஏற்றுக்கொள்வதாக நக்கலடிக்கிருர் கவிஞர்.

முருகையன் எழுதுகிருர்: 'பண்டிதருக்கு நாமொன்று கூறுகிருேம். நீங்கள் பரவலாகத்தானே பார்த்திருக்கிறீர்கள்? விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் தரமான கவிதைகளைத் தருகிருர்கள் என்கிறீர்களே, அந்தத் தரமான கவிதைகளைத்தானும் தாங்கள் நன்ருக—ஊன்றி நயமுணர்ந்து படிக்கவில்லை. தமிழகத்தில் எழுதப்படும் தரமுயர்ந்த கவிதைகளையும் சந்தித்திருக்கிறீர்களோ என்பது ஐமிச்சமே. ஏனென்ருல் இவ்விரு நாடுகளின் கவிதை ஆக்கங்களை ஒப்பிட்டுத் தாங்கள் வெளியிடும் கருத்து, தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது: இங்கு எழுதப்படும் நாலாந்தரமான கவிதைகளை அங்கு எழுதப்படும் மூன்ருந்தரமான கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்கள் என்றே எமக்குத் தோன்றுகிறது...'

ஐயா முருகையா! பண்டிதர் தன் கூற்றுக்கு மேற்கோளாக எந்த ஒரு கவிதையையும் காட்டவில்லையே! தன் அபிப்பிராயத்தைச் சொல்வதுடன் நின்றுவிட்டாரே! நிலைமை இப்படி இருக்க, இந்த 'மூன்ருந்தர' விவகாரங்களை ஏன் வலிந்து புகுத்துகின்றீர்கள்? அவர் பிழையாக ஒப்பிடுகிருர் என்று உங்களுக்கு எப்படி ஐயா தோன்றிற்று? மேற்கோள் காட்டாத பண்டிதருடன் விணுக ஏன் 'மல்லுக்' கட்டுகிருர்கள்? முற்போக்கு எழுத்தாளர்களுக்கே இயல்பான 'நிழல் போராட்டத்தில்' நீங்களும் ஈடுபடத் தொடங்கிவிட்டீர்களோ?

நாவற்குழியூர் நடராஜனையும் அவருடைய கவிதைகளையும் குறிப்பிட்டுவிட்டு, 'இளைய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்கள்,—தான்தோன்றிக் கவிராயர், மஹாகவி, நீலாவணன், அ. ந. கந்தசாமி, நுஃமான், சத்தியசீலன் ஆகியவர்களின் ஆக்கங்களைப் பண்டிதர் போல்வார் படித்துப்பார்க்க வேண்டும்' என்று புத்திமதி கூறுகிருர் முருகையன். 'ஆகியவர்கள்' என்று சொன்னதினுல், இவர்கள் மட்டுமே சிறந்த கவிஞர்கள் என்பதுதான் முருகையனின் கருத்துப்போலும்! 'விரல் விட்டு எண்ணக்கூடிய' என்றுதானே பண்டிதரும் சொல்கிருர்? ஏழுபேரைச் சுட்டிப்பாகச் சொன்னதால், முருகையனும் பண்டிதரின் கருத்தைத்தானே ஆதரிக்கிருர்? மஹாகவியின் 'குறும்பா'வையும் ச. வே. பஞ்சாட்சரத்தின் 'எழிலி'யையும் பண்டிதர் சிலாகித்துச் சொல்லியிருப்பது முருகையனின் கண்ணிற் படவில்லையா? கருத்திற் தைக்கவில்லையா? எதிர்காலக் கவிதை பற்றிய தன் நம்பிக்கையை வெளியிடும் பண்டிதரின் வசனத்தை முருகையன் வேண்டுமென்றே தன் கட்டுரையில் குறிப்பிடாததன் காரணம் என்ன? பண்டிதர் 'மூக்குச் சாத்திரம் பார்க்கிருர்' என முருகையன் கருதிவிட்டாரா?

கவிஞரே! பதில் தருவீர்களா?

தங்களுடைய அணியைச் சேர்ந்தவர்கள்தான் சிறந்த எழுத்தாளர்களென்று அடிக்கடி பட்டியல் வெளியிடுவதும், மேடை கிடைத்தால், தங்களுடைய சில 'வாய்ப்பாடு'களையே திரும்பத் திரும்பக் கூறிப் பொதுமக்களை அலுக்க வைப்பதும், முதுகு சொறியும் வேலைகளில் இறங்குவதும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களைப் பீடித்துள்ள பெரு வியாதிகள் என்பது வாசகர்கள் அறிந்த சங்கதி.

இதே வியாதிகள் கவிஞர் முருகையனை எவ்வளவு தூரம் நிலைகுலைய வைத்திருக்கின்றன என்பதை அவர் எழுதிவரும் சில கட்டுரைகள் துலாம்பரமாக்குகின்றன.

---

## அரசியல் புற்று நோய்!

பேரவை பட்ஜட் விவாதத்தில் ஒரு கட்டத்தில் கல்விப் பிரதி அமைச்சர் கூறியது எமது சிந்தனைக்கு வருகின்றது. 'தமிழ் மக்களை மதிக்கிருேம், ஆனுல் தமிழரசுக்கட்சியினரை நாம் மதிக்கவில்லை' என்று குறிப்பிட்டார் திரு. துடாவை. இது அரசாங்கத்தின் மனே நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றதெனலாம்.

இது நாட்டின் இன்றைய அரசியலில் ஒரு புற்றுநோய் நிலை என்று வர்ணித்தால் அதில் தவறில்லை. இந்தச் சங்கட நிலையிலிருந்து அரசாங்கத்தை பாதுகாப்பது அவசியமாகின்றது. மக்களை மதித்து, மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை எவ்வாறு அவமதிக்கலாம்?

இந்த முரண்பாடான நிலையே இன்று நாட்டில் நிலவும் ஒற்றுமையீனத்துக்கும் பிரிவினைவாதத்துக்கும் முக்கிய காரணமாகும். தமிழ் மக்கள் தமிழரசாருக்கென்று நிரந்தரமாக எழுதப்பட்ட இனமல்லவென்பது தெளிவு. தமிழரசாரை ஆதரிப்பதில் தக்க நியாயம் உண்டு.

—ஈழநாடு (ஆசிரியத் தலையங்கம்—20-12-73)

---

# அரசனை நம்பி புருஷனை கைவிட்ட யாழ் பா. உ!

'யாழ்ப்பாணப் பிரதிநிதி எமது கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர். அவர் இன்று அரசாங்கக் கட்சியையோ, அன்றி எதிர்க்கட்சியையோ சாராமல் திரிசங்கு சொர்க்க நிலையில் நின்று செயற்படுகிருர்! அரசாங்கத்தையும், அதன் அமைச்சர்களையும் திருப்திப்படுத்தவேண்டும் என்பதே, அவரது நோக்கமாக இருக்கிறது;

'எமது பகுதி மக்கள் காலரா நோயினுல் பாதிக்கப்பட்ட சமயம் நாங்கள் அவர்கள் மத்தியில் இருந்து, அவர்களுக்கு சேவை செய்தோம்! யாழ்ப்பாண பா. உ. வைப்போல கொழும்பில் இருந்து தொலைபேசி மூலமாகத்தொகுதி நிலையை நாங்கள் அறியவில்லை.

'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட நிலையில்— கொழும்பு வாசம் நடத்தும் இவருக்கு தமிழ் மக்களின் உணர்வுகள் புரியாது.

—தேசிய பேரவையில் பண்டிதர் இரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ம் திகதி வெள்ளி முதல்

**கெப்பிட்டல்** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ் நகர்)




சிவாஜிகணேசன்,
கே. ஆர். விஜயா,
நாகேஷ், பாலாஜி, மனோகர்,
எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —

---

## மூன்ருவது ஜனத்திரளான வாரம்



வெற்றிகரமாக காட்சியளிக்கிறது

**சென்ட்ரல்** (மருதானை) 2, 6, 9.30
ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.30

நூறு நாட்களுக்கு மேல் ஓடிய விறு விறுப்பான படம்!
பொப் இசை நிறைந்தது அபிமான நட்சத்திரங்கள்

**சிவாஜிகணேசன், ஜெயலலிதா**
— நடித்த —

# பட்டிக்காடா பட்டணமா

காலத்தை தவறவிடாமல் இன்றே பாருங்கள்

---

## தை 4-ம் திகதி முதல்

**செல்லமகால்**

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா,
ஏ. வி. எம். ராஜன்—புஷ்பலதா
அசோகன், சோ, மனோரமா நடித்த

# எங்கள் தங்கம்

---

## 3வது வாரம்!

**கெயிட்டி**

ஜெய்சங்கர், நாகேஷ்,
வி. கே. ராமசாமி, எஸ். வி. சகஸ்ரநாமம்,
வி. எஸ். ராகவன், லட்சுமி, ரமாபிரபா,
காந்திமதி, பார்வதி —நடித்த—

# நவாப் நாற்காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் டிசம்பர் மாதம் 30-திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது